# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

## ‘கொங்கு மாமணி’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட சான்றோர்கள்

**2001 ஆம் ஆண்டு**

1. தெய்வத்திரு.கே.எம்.சென்னியப்பன்
2. டாக்டர் பழனி ஜி.பெரியசாமி
3. திரு. ஜெம் ஆர். வீரமணி

**2002 ஆம் ஆண்டு**

4. திரு. எஸ்.வி.பாலசுப்பிரமணியம்
5. திரு. இரா. காந்தி

**2003 ஆம் ஆண்டு**

6. திரு. டி.ஆர்.கார்த்திகேயன், I.P.S. (Retd.)
7. திருச்சி திரு. ஆர். தேவராசன்
8. திரு. ஜி.ஆர்.சுந்தரவடிவேல்

**2004 ஆம் ஆண்டு**

9. முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்
10. டாக்டர் சி.பழனிவேலு
11. டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்

**2005 ஆம் ஆண்டு**

12. NSIT. டாக்டர் எம்.முருகேசன்
13. திரு. கே.பழனியப்பன்
14. திரு.சி.கே.இராமசாமி

**2006 ஆம் ஆண்டு**

15. திரு.நல்லா கோவிந்தசாமி
16. சக்தி மசாலா டாக்டர் பி.சி.துரைசாமி
17. திரு. வி.கே.தங்கவேல்

**2007 ஆம் ஆண்டு**

18. புலவர் செ.இராசு
19. திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி
20. பத்மஸ்ரீ டாக்டர் க.ரா.பழனிசாமி

**2008 ஆம் ஆண்டு**

21. ஆடிட்டர் திரு. மு.பாலசுப்பிரமணியம்
22. டாக்டர் என்.எம்.வீரய்யன்
23. தெய்வத்திரு. ப.செங்கோடன்

**2009 ஆம் ஆண்டு**

24. பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ்.நடராஜன்
25. திரு.கே.செல்லமுத்து
26. பத்மஸ்ரீ ஏ.சக்திவேல்

**2011 ஆம் ஆண்டு**

27. அட்லஸ் திரு. எம்.நாச்சிமுத்து
28. திரு. கே.ஏ.செங்கோட்டுவேல்

**2012 ஆம் ஆண்டு**

29. கலைமாமணி சிவகுமார்

**2013 ஆம் ஆண்டு**

30. டாக்டர் நல்லா ஜி.பழனிசாமி

**2014 ஆம் ஆண்டு**

31. இராசி சீட்ஸ் டாக்டர் எம். இராமசாமி

**2015 ஆம் ஆண்டு**

32. திரு. பி.காசியண்ண கவுண்டர்

**2016 ஆம் ஆண்டு**

33. திரு.வி.இரத்தினசபாபதி
34. டான் ஸ்ரீ எம்.கேவியஸ்
35. டாக்டர் வீரப்பன் சுப்பிரமணியன்

**“கொங்குமாமேதை” விருது பெற்றவர்**

தெய்வத்திரு. அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் (2006 ஆம் ஆண்டு)

# கொங்கு மாமணி



**திரு. வி.இரத்தினசபாபதி**

திரு.வி.இரத்தினசாபதி அவர்கள் பொள்ளாச்சி நகரில், 1955 ஆம் ஆண்டு திரு. வெங்கடாசலக் கவுண்டர் – திருமதி தெய்வானையம்மாள் தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தார். 1940 ஆம் ஆண்டு வாக்கிலேயே, பெரிய நிலக்கிழாராகவும், பட்டங்கள் பல பெற்ற நல்ல கல்வியறிவுடையவராகவும் திகழ்ந்தவர், இவருடைய தந்தை வெங்கடாசல கவுண்டர் அவர்கள். திரு. இரத்தினசபாபதி அவர்களுடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள் மற்றும் இரண்டு சகோதரிகள்.

இவர் பள்ளிப்படிப்பை உடுமலை ரோட்டிலுள்ள நகராட்சி ஆரம்பப் பாடசாலையிலும், உயர்நிலைப்பள்ளிப் படிப்பைப் பொள்ளாச்சி உயர்நிலைப் பள்ளிலும் முடித்தார். பின்னர், பொள்ளாச்சி NGM கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் B.Sc, பட்டம் பெற்றார். பின்னர் ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் வித்தியாலயாவில் B.Ed., பட்டமும், PSG Institute of Management இல் MBA பட்டமும், கர்நாடகா சட்டக்கல்விப் பல்கலைக்கழகத்தில் LLB பட்டமும் பெற்றார். பின்னர், பெங்களூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் M.B.L. பட்டத்தைப் பெற்றார்.

இவர் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராகச் சேர்ந்து படிப்படியாகப் பதவி உயர்வுகள் பெற்று, காவல்துறை கண்காணிப்பாளராகப் பணியாற்றியபோது, 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் பெருமைமிகு உயர் பதவியில் 2015 ஆம் ஆண்டு வரை திறம்படப் பணிபுரிந்தார்.

காவல் துறையிலும், தேர்வாணையக் குழுவிலும் பணியாற்றிய போது விதிகளுக்குட்பட்டு, எண்ணற்ற பேர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து, பலரது பாராட்டையும் பெற்றார். கிராமப்புரத்தைச் சேர்ந்தவர்களிடமும், விவசாயிகளிடம், ஏழை மக்களிடமும் அன்புடனும், கனிவுடனும் பேசி அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தார். ‘காவல்துறை உங்கள் நண்பன்’ என்ற கூற்றுக்கு இணங்க, காவல் நிலையத்திற்கு வருகின்ற மக்களை அலைக்கழிக்காமல் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முயன்றார். தகுதி வாய்ந்த, வசதி குறைந்த மாணவர்களுக்குத் தேவையான நிதி உதவியை அளித்து, அவர்களை நன்கு படிக்க ஊக்குவித்தார்.

கல்லூரியில் படிக்கும்போது, ‘Outstanding Student’ விருதைப் பல முறை பெற்றுள்ளார். பள்ளியிலும், கல்லூரியிலும் முதல் மாணவராகச் சிறப்பிடம் பெற்றவர் இவர். PSG Institute of Management இவருக்கு ‘Star of PSG IM” என்ற விருதளித்துச் சிறப்பித்தது.

இவருடைய மிகச் சிறப்பான, தைரியமான செயல்பாடு, அறிவாற்றல், சேவை போன்றவற்றிக்காக, பாரதப் பிரதம அமைச்சர் பதக்கம், 'Prime Minister's Medal for Life Saving' ஆகிய விருதுகள் இவரது பணிக்குப் பெரும் பெருமை சேர்ப்பதாய் அமைந்தன. காவல் துறையில் பணியாற்றிய போது சில நுட்பமான, முக்கிய வழக்குகளில் சென்னை உயர்நீதிமன்றமும், இந்திய உச்சநீதிமன்றமும் வழங்கிய சில தீர்ப்புகளில் இவருடைய அர்ப்பணிப்பான மற்றும் சிறப்பான சேவைகள் பாராட்டப்பட்டுள்ளன.

தேர்வாணைய உறுப்பினர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், சென்னையிலும் கோவையிலும் 'SS Globals' எனும் நிறுவனத்தைத் தொடங்கியுள்ளார். இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி அவர்களால், மும்பை காவல்துறை முன்னாள் ஆணையர் முன்னிலையில் இந்நிறுவனம் தொடங்கப்பட்டது. அனைத்துத் தொழில் மற்றும் வர்த்தகத்தைச் சேர்ந்த அனைத்துப் பிரச்சினைகளிலும் தனிக் கவனம் செலுத்திச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

1985 ஆம் ஆண்டு இவருக்குத் திருமணம் நடைபெற்றது. மனைவி திருமதி சக்தி, 1985 ஆம் ஆண்டு உடுமலை சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு.திருமலைசாமிக் கவுண்டரின் பேத்தியும், புலவர் காளிமுத்து கவுண்டரின் மகளுமானவர் இவர். இத்தம்பதியருக்கு இரண்டு மகள்கள் – சுபாஷினி மற்றும் சிந்து உள்ளனர். மூத்த மகள் சுபாஷினியின் கணவர் திரு. வெங்கடேஷ். இத்தம்பதியர் சேலத்தில் கல்வி நிறுவனம் ஒன்றை நடத்தி வருகின்றனர். இளைய மகள் சிந்துவின் கணவர் திரு. அருண்குமார். இவர்கள் கோவையில் சொந்தமாகத் தொழில் நடத்தி வருகின்றனர்.

இவர் ஒரு மனிதநேய மாண்பாளர். நலிந்த மக்களுக்காகப் பல்வேறு வகைகளில் உதவி செய்து அவர்களுடைய சிரமங்களைப் போக்கிடவும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் பாடுபட்டு வருகிறார்.

கல்லூரியில் படித்த காலத்திலும், காவல்துறையில் சிறப்பாகப் பணியாற்றியபோதும், தேர்வாணையக்குழு உறுப்பினராயிருந்த போதும், கொங்குச் சமுதாயப் பற்று மிக்கவராய் விளங்கினார்.

கொங்குவேளாளர் சமூகத்திற்காகவும், தமிழ்ச் சமுதாயத்திற்காகவும் ஆற்றிய பணிகள் ஏராளம். எப்போதெல்லாம் – எங்கெல்லாம் நமது சமுதாயம் பாதிப்புகளுக்கு உள்ளானதோ, எங்கெல்லாம். நம் கௌரவம் கேள்விக்கு உரியதாயிற்றோ, அப்போதெல்லாம் எதற்கும் அஞ்சாமல் போராடியுள்ளார். இப்போதும் தன் சமுதாயப் பணியை வேகத்தோடும், விவேகத்தோடும் தொடர்ந்து வருகிறார்.

தமது அரசுப்பணியிலும், சமுதாயப்பணியிலும் உன்னதமாய்ப் பணியாற்றி, சாதனைகள் பலவற்றைப் புரிந்து, கொங்குச் சமுதாயத்திற்குப் பெரும் பெருமை சேர்த்திட்ட திரு. வி.இரத்தின சபாபதி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு மாமணி' விருது வழங்கி கௌரவிப்பதில் பெருமை கொள்கிறது.



# கொங்கு மாமணி



## டான் ஸ்ரீ எம்.கேவிஎஸ்

மக்கள் முன்னேற்றக் கட்சியின் (People's Progressive Party) தலைவரும், கொங்குச் சமுதாயத்தில் மலேசியாவில் பிறந்து மலேசியா தமிழர்களின், குறிப்பாக, கொங்கு மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வருபவரும், மலேசிய நாட்டுப் போக்குவரத்து அமைச்சகத்திற்கான பிரதம அமைச்சரின் ஆலோசகருமான டான்ஸ்ரீ எம்.கேவிஎஸ் அவர்கள் 1954 ஆம்ஆண்டு பென்டோ எஸ்டேட், குவாலியர் லிப்பிஸ் பஹாய்கள் என்ற சிற்றூரில் பிறந்தவர்.

மிகவும் பிற்பட்டதாகவும், வறுமைச் சூழல் நிறைந்ததாகவும் இருந்த அந்தக் கிராமத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்து சுமார் 20 ஆண்டுகள் அந்த ஊரில் வசித்துவந்தார். அத்தகைய இடத்தில் எஸ்டேட்டில் சுற்றித் திரிந்த ஓர் இளைஞன் தடைகளைக் கடந்து வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு இன்றைய தினம் நாடு போற்றும் நல்ல தலைவராய் உயர்ந்துள்ளார். இவருடைய இலட்சியம் வறுமையை விரட்டுவதும், ஏழைகளுக்கு உதவுவதும் என்பதுதான்.

இவர் கல்வியில் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார். படிப்பு மற்றும் பயிற்சி (1972–1974), இங்கிலாந்து பக்கிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் LLB பட்டம் (1982–1985), Post Graduate in Sociology - Legal Studeis (1985), Double Executive MBA UCLA, Los Angeles, USA (2007) முதலானவை இவர் பெற்ற பட்டங்கள்.

மலேசிய விமானத் துறையில் உயர் அலுவலர் (1974–1988), மலேசிய உயர்நீதிமன்ற வழக்கறிஞர், நாடாளுமன்ற மேலவையில் செனட்டர் (2000–2004), நாடாளுமன்ற உறுப்பினர் (2004–2008), உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை துணை அமைச்சர் (2001–2008), லிம்கோக்விங் Creative Technological University இல் பேராசிரியர் எனப் பல பொறுப்புகள் ஏற்றுச் சிறப்பாகப் பணியாற்றியவர் இவர்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் மக்கள் திலகம் MGR மலேசியா சென்றிருந்த போது, கேவிஎஸ் அவர்களுக்கு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. எம்.ஜி.ஆர்.அவர்கள் கூறிய ஆலோசனையின் பேரிலேயே, ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்ற இலட்சியத்தைக்கொண்டுள்ள இவர் அரசியலில் நுழைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வறுமையை விரட்டுவோம் என்பதைத் தாரக மந்திரமாகக்கொண்டு அந்த இலட்சியத்தை நிறைவேற்ற அரசியலில் பங்கேற்று அதிகாரம் பெறுவது அவசியம் என்று உணர்ந்து செயல்பட்ட இவர் இன்று மலேசியாவில் PPP கட்சியின் புகழ்மிக்க தலைவராகவும், மக்கள் போற்றும் மனித நேய மாமனிதராகவும், தமிழர்கள் பெருமை கொள்கின்ற அளவுக்குச் சிறப்புப் பெற்றுள்ளவராகவும் விளங்கி வருகிறார்.

இவருடைய அரசியல் வாழ்க்கை 1980 ஆம் ஆண்டு தொடங்கியது. PPP கட்சியில் உறுப்பினராய்ச் சேர்ந்தார். அதே வருடத்தில் கிளைத் தலைவராகவும், வட்டத் தலைவராகவும், மாநிலத் தலைவராகவும் உயர் பொறுப்புகள் பெற்றார். 1984 ஆம் ஆண்டு மலேசியாவில் ஆட்சியில் இருந்த தேசிய முன்னணி (National Front) உயர்மட்டக் குழுவின் துணைத்தலைவராகவும், பின்னர் 1993 ஆம் ஆண்டு முதல் PPP கட்சியின் தலைவராகவும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். இன்று இக்கட்சி ஆறு இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டதாக உள்ளது என்பது இவருடைய தலைமைக்கும் திறமைக்கும் உழைப்புக்கும் சான்றாய்த் திகழ்கிறது.

எண்ணற்ற உயர் அமைப்புகளுக்கும், மதிப்புறு சங்கங்களுக்கும் ஆலோசகராகவும், புரவலராகவும் உள்ளார் இவர். இவற்றின் நற்பணிகளில் தீவிரப் பங்கேற்று அறப்பணிகள் பலவற்றை ஆரவாரமின்றிச் செய்துவருகிறார். பல கலாச்சார, சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகிறார். எண்ணற்ற மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும், விழாக்களிலும் பங்கேற்றுப் பலரும் பாராட்டும் வகையில் சொற்பொழிவாற்றியுள்ளார்.

இவருடைய சாதனைகளுக்காகவும், சமூக சேவைகளுக்காகவும், நாடாளுமன்ற நற்செயற்பாட்டுகளுக்காகவும், வறுமையை ஒழிக்க இவர் ஆற்றிய அரும்பணிகளுக்காகவும் பல உயரிய விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டு பிரதம அமைச்சரின் பரிந்துரையின்படி பேரில் மன்னர் படுக்கா பெகின்டா வழங்கிய Datuseri எனும் விருது, 2014 ஆம் ஆண்டு PSM என்னும் அமைப்பு சார்பில் மன்னர் கையால் வழங்கிய Datukseri விருது, 1996 ஆம் ஆண்டு PJN என்னும் அமைப்பு சார்பில் மன்னர் கையால் வழங்கிய Datuk எனும் விருது, Justice of Peace 2001 ஆம் ஆண்டு வழங்கிய JP விருது ஆகியன இவர் பெற்றுள்ள விருதுகளுள் குறிப்பிடத்தக்கனவாகும்.

வறுமையிலே பிறந்து, சுமார் 20 ஆண்டுகள் வறுமையிலேயே வாழ்ந்து வந்ததால், வறுமை எவ்வளவு கொடியது என்பதை அனுபவித்து உணர்ந்தவர் இவர். எனவே வறுமையை விரட்ட இவர் எடுத்து வருகின்ற ஆக்கபூர்வமான செயல்பாடுகளுக்கு மக்கள் என்றென்றும் உறுதுணையாக இருப்பர் என்பது உறுதி.

மலேசிய மக்களும், கொங்குச் சமுதாய மக்களும் வறுமையில் வாடும் ஏழை மக்களும் வளமோடும் நலனோடும் மகிழ்ச்சியாய் வாழ்ந்திட வேண்டும் என்பதையே தன்னுடைய இலட்சியக் கனவாக எண்ணி, அந்த இலட்சியத்தை அடையும் வகையில் அயராது பாடுபட்டு வருகின்றவரும், கொங்கு நாட்டை வேராகக் கொண்டு மலேசிய நாட்டில் ஓர் ஆலமரமாய் வளர்ந்து அனைவருக்கும் உதவி செய்துவருகின்றவருமான சாதனைச் செம்மல் டான்ஸ்ரீ எம்.கேவியஸ் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு மாமணி' விருது வழங்கி கௌரவிப்பதில் பெருமை கொள்கிறது.



# கொங்கு மாமணி



**டாக்டர் வீரப்பன் சுப்ரமணியன்**

டாக்டர் வீரப்பன் சுப்ரமணியன் அவர்கள் நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் கிராமத்தில் எளிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த திரு.செல்லப்ப கவுண்டர் – திருமதி காளியம்மாள் தம்பதியருக்கு 1950 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார்.

பள்ளிக்கல்வியைச் சேந்தமங்கலத்தில் முடித்த இவர், மருந்தியல் துறையில் இளங்கலை (B.Pharmacy) பட்டப்படிப்பை மதுரை மருத்துவக் கல்லூரியில் நல்ல மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றார். பின்னர் BITS பிலானியில் முதுகலை பட்டம் பெற்றார். பெற்றோரும் உடன் பிறந்த சகோதரர்களும் பல பொருளாதார நெருக்கடிகளைச் சமாளித்துக்கொண்டு, இவர் உயர்கல்வி பெறுவதையே இலட்சியமாகக் கொண்டு செய்த தியாகங்களும் உதவிகளும் இவர் கல்லூரிப் படிப்பை முடிக்கச் சாத்தியமாயின. கிராமச் சூழலில் வறுமையின் பிடியில் இவர் குடும்பம் இருந்த போதிலும் படிப்பை வெற்றிகரமாக முடித்துப் பட்டங்கள் பெற்றது, அந்நாளில் இவரின் ஒட்டுமொத்த குடும்பம் நிகழ்த்திய சாதனையென்றே கூறலாம்.

பின்னர், 1975 ஆம் ஆண்டு ‘திரைகடல் ஓடியும் திரவியம் தேடு’ என்ற முதுமொழிக்கேற்ப அமெரிக்கா சென்று இரண்டு ஆண்டுகள் சில வேலைகளில் பணியாற்றிய பின்னர், Rutgers பல்கலைக்கழகத்தில் சேர்ந்து மருந்தியல் துறையில் 1981 ஆம் ஆண்டு Ph.D., பட்டம் பெற்றார். பள்ளியில் சேர்ந்த பொழுதிலிருந்து, டாக்டர் பட்டம் பெற்றது வரை First Rank அல்லது Second Rank பெற்றுச் சாதனை படைத்தார். 1979 ஆம் ஆண்டு தமிழகம் திரும்பி, திருப்பூரைச் சேர்ந்த டாக்டர் கோவிந்தம்மாள் நாச்சிமுத்து (Mrs. Govi) எனும் கோதையைத் திருமணம் புரிந்துகொண்டார். இனிய இல்லறத்தில் அனுராதா என்ற மகளும், இளங்கோ என்னும் மகனும் உள்ளனர். இவருடைய மனைவி டாக்டர் கோவி, குழந்தைகள் நல மருத்துவராக, அமெரிக்காவில் கடந்த 32 ஆண்டுகளாகச் சிறப்பாய்ப் பணியாற்றி வருகிறார். மகள் அனுராதா மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் பட்டம் பெற்றுள்ளார். மகன் இளங்கோ Rutger பல்கலைக்கழகத்தில் Pharm.D. பட்டமும், நியூயார்க் பல்கலைக்கழகத்தில் MBA பட்டமும் பெற்றுள்ளார்.

1973 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டுவரை, 11 ஆண்டுகள் மருந்தியல் துறையில் விஞ்ஞானியாக, பெரிய மருந்தியல் நிறுவனங்களாக விளங்கி வருகின்ற Squibb, J & J, Richardson

Merrill, ஆகியவற்றில் பணியாற்றினார். பின்னர், மருந்தியல் தொழில்துறையில் ஆராய்ச்சிப் பிரிவின் தலைவராக முதலில் 'Purepace Pharmaceuticals' என்ற நிறுவனத்திலும், அதன்பிறகு Zenith Laboratories' நிறுவனத்தின் துணைத் தலைவராகவும் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணியாற்றினார்.

ஜெனித் நிறுவனத்தில் வீரப்பன் அவர்கள், அங்குச் செயலாற்றிவந்த மேலும் ஐந்து அலுவலர்களுடன் இணைந்து அப்போது கடனிலிருந்த நிறுவனத்தின் நிதிநிலையை மேம்படுத்த முடிவு செய்தார். அதற்காக இவர் பல புதிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். இவரது வெற்றிகரமான ஆராய்ச்சிகளாலும், நிர்வாகத் திறமையினாலும், மற்ற ஐவரும் பிறதுறைகளில் செய்த சீர்திருத்தங்களாலும் நிதி இழப்பில் சிக்கியிருந்த இந்நிறுவனத்தை மீட்டெடுத்ததோடு, ஒரு Mutual Fund Company யிடமிருந்து 9 மில்லியன் டாலர் கடன்பெற்று, ஜெனித் நிறுவனத்தை ஐந்து ஆண்டுகளில் லாபத்திற்குக்கொண்டு சென்று சாதனை படைத்தார். பின்னர் இந்த நிறுவனம் IVAX நிறுவனத்திற்கு 650 மில்லியன் டாலர்களுக்கு விற்கப்பட்டது.

ஆறுமாத ஓய்விற்குப் பிறகு, 1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், வீரப்பன் அவர்கள் சொந்தமாக, தன்னுடைய தாயார் காளியம்மாள் பெயரில் 'Kali Laboratories' எனும் R & D சேவை நிறுவனத்தைத் தொடங்கினார். இரண்டு ஆண்டுகளில், இந்நிறுவனத்துடன் பல பெரிய மருந்தியல் நிறுவனங்களை வாடிக்கையாளர்களாகச் சேர்த்துக்கொண்டு செயல்பட ஆரம்பித்தார்.

இவர் ஆராய்ச்சி செய்து தயாரிக்கும் மருந்துகளைச் சந்தைப்படுத்தி விற்பது வாடிக்கையார்களின் பொறுப்பு. அதற்காக ஒரு தொகை அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவருடைய மனைவி டாக்டர் கோவி சுப்ரமணியன் இந்நிறுவனத்தின் கணக்கு வழக்குகளையும், இரண்டு குழந்தைகளுக்குத் தாயார் மற்றும் குழந்தை நல மருத்துவர் ஆகிய பொறுப்புகளோடு சேர்த்துப் பார்த்து வந்தார். ஒவ்வோர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்பதற்கு இத்தம்பதியர் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார்கள்.

1997 ஆம் ஆண்டு, டாக்டர் வீரப்பன், 8 மில்லியன் டாலர்கள் கையிருப்போடு தொடங்கிய காளி நிறுவனத்தை, 2004 ஆம் ஆண்டு PAR Phamaceuticals என்ற ஒரு வாடிக்கையாளர் நிறுவனத்திற்கு 140 மில்லியன் டாலர்களுக்கு விற்றுச் சாதனை படைத்தார். விற்ற போதிலும் அந்த நிறுவனத்தில் 2005 ஆம் ஆண்டு இறுதிவரை பணியாற்றிப் பணி ஓய்வு பெற்றார்.

பின்னர், ஓராண்டுப் பணி ஓய்விற்குப் பிறகு, Elite Pharmaceuticals எனும் ஒரு சிறிய பொது நிறுவனத்தை, நிதி முதலீடு பெற்றுத்தரும் பங்குதாரராய்ச் சேர்த்துக்கொண்டு டாக்டர் வீரப்பன் Novel Laboratories என்ற மருந்தியல் நிறுவனத்தை 2007 ஆம் ஆண்டு தொடங்கினார். Elite நிறுவனம் முதலீடு செய்ய இயலாததால், அது வெளியேற்றப்பட்டது. 2008 ஆம் ஆண்டு, டாக்டர் வீரப்பன் Gavis Pharmaceuticals எனும் விற்பனை மற்றும் சந்தைப் படுத்துதல் நிறுவனத்தை, Novel நிறுவனம் தயாரிக்கும் மருந்துகளையும் அனுமதி பெற்ற மருந்துகளையும் விற்பதற்காக நிறுவினார். மூன்றாண்டுகளுக்குப் பிறகு, நிறுவனத்தில் திறமை மற்றும் அனுபவம் வாய்ந்த புதிய விஞ்ஞானிகளைச் சேர்த்துக் கொண்டும், சில மாற்றங்களைச் செய்தும் இந்நிறுவனத்தைச் சீரமைத்தார். நிறுவனம் வியத்தகு வளர்ச்சி பெற்றது, 120 மருந்துகளைத் தயாரித்து விற்கும் நிறுவனமாகவும், மேலும் 90 மருந்துகளின் விற்பனை அனுமதிக்காகக் காத்திருக்கும் நிறுவனமாகவும் பெரும் வளர்ச்சி பெற்றது. இந்த ஆண்டு (2016) மார்ச் மாதம், இந்த நிறுவனத்தை LUPIN Pharmeceuticals என்று நிறுவனத்திற்கு 880 மில்லியன் டாலர்களுக்கு விற்றுப் பெரும் சாதனை படைத்துள்ளார்.

இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கு டாக்டர் வீரப்பன் அவர்களுக்குத் துணையாக மேலாண்மையில் நிபுணத்துவம் பெற்றுள்ள மகனும், வழக்கறிஞர் மகளும் பெரிய அளவில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டனர். தற்போது பெங்களூரில் Wintac என்ற (Injectable Products Entity) நிறுவனமும், அமெரிக்காவில் Somerset Therapeutics என்ற சந்தைப்படுத்தும் நிறுவனமும் உள்ளன. இவற்றில் தந்தை தலைவராகவும், மகன் பொது மேளாளராகவும் சிறப்பாகப் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர். கடந்த 40 ஆண்டுகளில் பல மருந்துகளைக்கண்டு பிடித்து, அவற்றைச் சந்தைகளுக்கு வெற்றிகரமாகக்கொண்டு வந்துள்ளார். இவர்.

கடந்த 41 ஆண்டுகளாக அமெரிக்காவில் வசிக்கும் இவர் 1000க்கு மேற்பட்ட பணியாளர்களுக்கும். எண்ணற்ற இந்திய, குறிப்பாக, கொங்குச்சமுதாய இளைஞர்களுக்கும் வேலைகொடுத்து, அமெரிக்காவில் குடியேறப் பேருதவி புரிந்துள்ளார். 20க்கும் மேற்பட்ட Millionaire களையும், சில Multi Millionaire களையும், பல தொழில் முனைவோர்களையும் மருந்தியலில் சிறப்புப்பெற்ற எண்ணற்ற விஞ்ஞானிகளையும் உருவாக்கி வியத்தகு சாதனை படைத்துள்ளார். UD FDA - Industry Technical Committee, US Pharmacopoeia Committee ஆகிய உயர்மட்ட மருந்தியல் தொழில் சங்கங்களில் பணிபுரிந்த பெருமைக்குரியவர் இவர்.

நியூஜெர்சியில் மனைவி கோவி அவர்களுடன் வசித்து வருகிறார். தன்னுடைய ஒன்றரை வருட பேத்தி நீலக்குறிஞ்சி வள்ளியுடன் அவ்வப்போது கொஞ்சி விளையாடி மகிழ்ந்து வருகின்றார்.

கடந்த 40 வருடங்களில் 300க்கும் மேற்பட்ட மருந்துகளைக் கண்டுபிடித்து அவற்றை வெற்றிகரமாகப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ள இவர், இத்துறையில் எண்ணற்ற இந்திய மற்றும் அமெரிக்க இளைஞர்கள் முன்னேற வழிவகை செய்துள்ளார். VGS Foundation என்னும் இவர்களின் குடும்ப அறக்கட்டளை மூலமாக இந்தியாவிலும் அமெரிக்காவிலும் நல்ல செயல்களுக்குப் பெருமளவில் நன்கொடைகள் அளித்துள்ளார். பரமத்தியில் உள்ள AIDS நோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் அனாதைக் குழந்தைகள் படிக்கும் ஒரு கிருத்துவப் பள்ளிக்கு மிகுந்த அளவில் நன்கொடை அளித்துள்ளார். சமூக சேவை, சமுதாய சேவை, அறப்பணிகள் ஆற்றுதல் ஆகியவற்றை முழு அளவில் செய்துவருகிறார்.

எளிய குடும்பத்தில் பிறந்து, குடும்பத்தின் நிதி நெருக்கடியிலும் படிப்பில் சாதனை படைத்து, அமெரிக்கா சென்று உயர்கல்வி பெற்று, தன்னுடைய அறிவுத் திறன், ஆராய்ச்சி அனுபவம், தன்னம்பிக்கை, அறிவாற்றால், செயலாற்றல், ஓய்வறியா உழைப்பு, மனைவி, மகன், மகள் ஆகியோரின் ஒத்துழைப்பு, அளப்பரிய நிர்வாகத் திறன் போன்றவற்றின் மூலம் மருந்தியல் தொழில் துறையில் மாபெரும் சாதனை படைத்ததோடு, எண்ணற்ற இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்துள்ள டாக்டர் வீரப்பன் சுப்ரமணியன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பாகள் சங்கம் ‘கொங்கு மாமணி’ விருது அளித்து வாழ்த்திக் கௌரவிப்பதில் பெருமை கொள்கிறது.



# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

2016 ஆம் ஆண்டு விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்கள்

## கொங்கு சாதனையாளர்கள்

| | | |
|---|---|---|
| திரு. | ப.அப்புக்குட்டி | பொள்ளாச்சி |
| திருமதி | மங்கையர்கரசி நடராஜன் | இராசிபுரம் |
| திரு. | விஜய்கிருஷ்ணராஜ் | சென்னை |
| டாக்டர் | பி.வி.தனபால் | இராசிபுரம் |
| திரு. | டி.செந்தில்குமார் | ஈரோடு |
| டாக்டர் | கே.எஸ்.சித்தார்த்தன் | ஈரோடு |
| டாக்டர் | பி.பிரவீன்ராஜ் | கோவை |
| செல்வி | பூவிதா சுப்பிரமணியன் | கரூர் |
| திரு. | வி.கிருஷ்ணன் | சேலம் |
| டாக்டர் | எம்.மகேஷ்வரி | திருச்சி |

## வெளிநாடு கொங்கு சாதனையாளர்கள்

| | | |
|---|---|---|
| திரு. | ஏ.கோபால் | கனடா |
| திரு. | என்.சசிகுமார் | சிங்கப்பூர் |
| திரு. | கே.வினோத்குமார் | லண்டன் |

## கொங்கு பெண் சாதனையாளர்கள்

| | | |
|---|---|---|
| திருமதி | ஆதிலட்சுமி லோகமூர்த்தி | சென்னை |
| செல்வி | ம.நவினா | சென்னை |

## கொங்கு வேளாண் சாதனையாளர்கள்

| | | |
|---|---|---|
| முனைவர் | சி.கதிரேசன் | நாமக்கல் |
| வழுக்குப்பாறை திரு. | து.பாலசுப்ரமணியம் | கோவை |
| திரு. | ஆர்.நடராஜன் | ஈரோடு |
| திரு. | ஜே.ஆர்.தனராஜ் | நாமக்கல் |

## கொங்கு இளம் சாதனையாளர்கள்

| | | |
|---|---|---|
| செல்வி | எஸ்.கே.கோகுலவாணி | சேலம் |
| செல்வன் | கே.பி.ஸ்ரீராம் | கரூர் |

# கொங்கு சாதனையாளர்



## முனைவர் ப.அப்புக்குட்டி

பேராசிரியர் முனைவர் ப.அப்புக்குட்டி அவர்கள் கோவை மாவட்டம், பல்லடம் வட்டத்தில் அமைந்துள்ள கேத்தனூர் கிராமத்தில் 1947 ஆம் ஆண்டு பிறந்தவர்.

முனைவர் ப.அப்புக்குட்டி அவர்கள் DCE படிப்பை 1968 ஆம் ஆண்டு பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியில் படித்து மாநிலத்தில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்றார். பின்னர், கோவை (CIT) தொழில்நுட்ப நிறுவனத்தில் B.E., மற்றும் M.E., பட்டங்களைத் தங்கப்பதக்கத்துடன் பெற்றார்.

பட்டயப் படிப்பை முடித்த பின்பு மூன்று ஆண்டுகள் வெலிங்டன் இராணுவப் பொறியியல் துறையில் பணி புரிந்தார். பின்னர், பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியில் 1973 ஆம் ஆண்டு இளநிலை ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். தொடர்ந்து 32 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றிப் பல பணி உயர்வுகளைப் பெற்று, இறுதி 5 ஆண்டுகள் முதல்வராகப் பணிபுரிந்து 2005 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றார். வகித்த பொறுப்புகள் அனைத்திலும், மிகத் திறம்படப் பணியாற்றித் தன்னுடைய கல்விப்பணியில் தனி முத்திரை பதித்தார்.

பொள்ளாச்சி P.A.பாலிடெக்னிக் கல்லூரி, பொள்ளாச்சி P.A.பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி, பொள்ளாச்சி P.A.கல்வியியல் கல்லூரி, கோவை தி கேம்போர்டு சர்வதேசப் பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்களின் தலைவராய்ப் பொறுப்பேற்று, சிறந்த கல்வியாளராய்த் திகழ்கிறார், முனைவர் அப்புக்குட்டி.

இந்திய தொழில்நுட்பக் கல்வி கழகத்தின் செயற்குழு உறுப்பினராக (2000–2005) ஐந்து ஆண்டுகள், தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் இயக்குநரால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழுவில் உறுப்பினர், தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் பாடத்திட்ட வல்லுநர் குழுவில் உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் சிறப்பாகப் பணியாற்றினார்.

பொறியியல் துறையில் பேராசிரியர், துறைத்தலைவர், கல்லூரி முதல்வர், கல்வி நிறுவனங்களின் தலைவர் எனப் பொறுப்புகள் ஏற்றுச் சிறப்பாகப் பணியாற்றிய இவர், தன்னுடைய சிறப்பான சேவைகளுக்காகப் பல விருதுகளைப் பெற்றுள்ளார். அவற்றுள் 2003–2004 ஆம் ஆண்டு ISTE மாநில பாலிடெக்னிக் நல்லாசிரியர் விருது, 2002–2003 ஆம் ஆண்டு ‘சிறந்த பாலிடெக்னிக் முதல்வர்’ என்ற தேசிய விருது, 2008 ஆம் ஆண்டு பொள்ளாச்சி அரிமா சங்கத்தின் ‘பிரம்ம குரு’ விருது, 2010 ஆம்

ஆண்டு உடுமலை சுழல் சங்கத்தின் ''வோகேசனல் எக்ஸ்சலன்ஸ் விருது'', 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநில அனைத்துக் கட்டடப் பொறியாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் 'வாழ்நாள் சாதனையாளர் விருது', 2012 ஆம் ஆண்டு அரிமா மாவட்டம் 324 பி1 சங்கத்தின் 'சிறந்த சமுதாய சேவை'க்கான விருது, 2014 ஆம் ஆண்டு இந்தியத் தொழில்நுட்பக் கல்விக்கழகத்தின் 'வாழ்நாள் சாதனையாளர்' விருது, 2014 ஆம் ஆண்டு இன்ஸ்டிட்யூட் ஆப் இன்ஜினியர்ஸ் வழங்கிய "Outstanding Engineer Award", அமெரிக்காவில் உள்ள 'உலகத் தமிழ்ப் பல்கலைக்கழகம்' 2014 ஆம் ஆண்டு வழங்கிய மதிப்புறு முனைவர் பட்டம், தமிழக ஆளுநர் வழங்கிய 'Excellence in Road Construction' விருது, அகில இந்தியத் தமிழ்ப் பேச்சாளர்கள் கூட்டமைப்பின் 'கல்விச் சுடர் விருது'', கோயம்புத்தூர் சிவில் இன்ஜினியர்ஸ் அசோசியேசன் (Cocena) வழங்கிய ''வாழ்நாள் சாதனையாளர் விருது'' ஆகியன குறிப்பிடத்தக்கவை.

ஐம்பதுக்கும் மேற்பட்ட திருக்கோயில்கள், பல பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல நிறுவனங்களுக்கு, கௌரவக் கட்டட ஆலோசகராகப் பணியாற்றி உள்ளார்.

முனைவர் அப்புக்குட்டி அவர்கள் 2006 ஆம் ஆண்டில் தொடங்கிய பி.ஏ.பாலிடெக்னிக் கல்லூரி, இன்று 2000 மாணவ மாணவியருடன் தமிழகத்தில் ஒரு முதன்மைக் கல்வி நிறுவனமாகத் திகழ்கிறது. மாநில அளவில் தேர்வுகளில் முதலிடத்தை பெற்று வருகிறது.

2009 ஆம் ஆண்டில் பி.எட் பட்டத்திற்கான பி.ஏ. கல்வியியல் கல்லூரியைத் தொடங்கினார். 2010 ஆம் ஆண்டில் கோயமுத்தூர் மணியகாரம்பாளையத்தில் ''திரு கேம்போர்டு சர்வதேசப் பள்ளி''யைத் தொடங்கிச் சிறப்பாக நடத்தி வருகிறார்.

இவருடைய மனைவி டாக்டர் இலட்சுமி இவருடைய வெற்றிகளுக்குத் துணையாக உள்ளார். இத்தம்பதியருக்கு பூங்கோதை அருள் ரமேஷ், கலைவாணி ராஜேஷ் என இரண்டு மகள்கள் உள்ளனர்.

32 ஆண்டுகள் பொறியியல் துறையில் மிகச் சிறப்பாய்ப் பணியாற்றியதுடன், பணி ஓய்வு பெற்றவுடன் தன்னுடைய அறிவு, ஆற்றல், அனுபவம், உழைத்துச் சேர்த்த சொத்து முதலானவற்றின் துணை கொண்டு கல்வி நிறுவனங்களைப் படிப்படியாகத் தொடங்கி, எண்ணற்ற கிராமப்புற மாணவர்களுக்குச் சிறப்பான கல்வி அளித்து, கல்வித்துறையில் சாதனைகள் பல நிகழ்த்தியுள்ள பேராசிரியர் முனைவர் ப.அப்புக்குட்டி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டி மகிழ்கிறது.



# கொங்கு சாதனையாளர்



## திருமதி மங்கையர்கரசி நடராஜன்

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், குருசாமிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் – திருமதி லட்சுமி தம்பதியரின் மகளாகப் பிறந்தவர், திருமதி மங்கையர்க்கரசி அவர்கள். இராசிபுரம் நகரில் அமைந்துள்ள, புகழ் வாய்ந்த பாவை குழுமக் கல்வி நிறுவனங்களின் தாளாளராகவும், சிறந்த பெண் கல்வியாளர்களுள் முன்னணியில் உள்ளவராகவும், நல்ல கவிஞராகவும், சிறந்ததொரு பேச்சாளராகவும் விளங்குபவர், ஐம்பது வயது நிம்பியுள்ள திருமதி மங்கையர்கரசி நடராஜன் அவர்கள்.

பள்ளிப்படிப்பைச் சேலம் செயின்ட் மேரீஸ் பள்ளியில் முடித்த இவர், கல்லூரிப் படிப்பைக் கோவை அவிநாசிலிங்கம் கல்லூரியில் முடித்து, M.Sc., (Maths) பட்டம் பெற்றார். நாமக்கல் மாவட்டம், காக்காவேரி கிராமத்தைச் சேர்ந்தவரும், பாவை கல்வி நிறுவனங்களின் தலைவராகவும், புகழ்மிக்க கல்வியாளராகவும் விளங்கும் CA.N.நடராஜன் அவர்களின் இல்வாழ்க்கைத்துணையான இவருக்கு, திருமதி அவந்தி என்ற மகள் உள்ளார். மருமகன் திரு. எஸ்.இராஜவேலு, இராசிபுரத்தில் Design Studios என்ற நிறுவனத்தைத் தொடங்கி நடத்தி வருகிறார். மகள் திருமதி அவந்தி கல்வியிலும், பரத நாட்டியத்திலும் சிறந்து விளங்குபவர். பாவை கல்வி நிறுவனங்களின் Director, Student Affairs எனும் பொறுப்பேற்று மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார். கணவரின் பணிகளில் துணையாக உள்ளார். இத்தம்பதியரின் மகள் பெயர் 'தீரா பாவை ராஜவேலு'. இவர் திருமதி மங்கையர்கரசியின் செல்லப் பேத்தி.

1983 ஆம் ஆண்டு முதல், நிதி மற்றும் காப்பீட்டுத் துறையில் திருமதி மங்கையர்கரசி அவர்கள் நல்ல நிபுணத்துவமும், சிறந்த அனுபவமும் பெற்று, சிறந்த முதலீட்டு ஆலோசகராய்த் திகழ்கிறார். கல்வி, வணிகம், தொழில் முதலான பல துறைகளில் நிதி, காப்பீடு ஆகியவற்றில் முக்கிய ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

இராசிபுரம் பெனிபிட் பண்டு நிறுவனத்தின் தலைவராகவும், நிர்வாக இயக்குநராகவும் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். பாவை கன்ஸ்ரக்ஷன்ஸ் நிறுவனத்தின் நிர்வாகப்

பங்குதாரராகவும், ஸ்ரீணீ EDP, பாவை அகாடமி மற்றும் பாவை எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனங்களின் உரிமையாளராகவும் உள்ளார் இவர்.

மேலும், கீழ்க்காணும் நிறுவனங்களின் தாளாளராய்ப் பொறுப்பேற்று, அவற்றின் அன்றாடப் பணிகளில் தீவிரமாகப் பங்கேற்று மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

. பாவை பொறியியல் கல்லூரி

. பாவை பாலிடெக்னிக் கல்லூரி

. பாவை கல்வியியல் கல்லூரி

. பாவை ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

. பாவை பொறியியல் கல்லூரி (2)

. பாவை வரம் பாலிடெக்னிக் கல்லூரி

. பாவை தொழில் நுட்பக் கல்லூரி

. பாவை கலை மற்றும் அறிவியல் பெண்கள் கல்லூரி

. பாவை வித்யாஷரம் (CBSE பள்ளி)

. பாவை மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி

. பாவை பொறியியல் பள்ளி

. பாவை மேலாண்மை பள்ளி

. பாவை நிருத்தியாலயா

. பாவை IAS அகாடமி


இளைஞர்களின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு, அவர்கள் தொழில்துறையில் மிகச்சிறந்த கல்வி அறிவு பெறவேண்டும் எனற நோக்கத்தில் அயராது பாடுபட்டு வரும் இவர், தானே ஒரு சிறந்த கவிஞராகவும், சொற்பொழிவாளராகவும், அறிவாற்றல் நிரம்பியவராகவும், சிறந்த நிர்வாகியாகவும் விளங்குவதால் பல்வேறு கல்வி மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும், சொற்போர்களிலும் கலந்துகொண்டு பலரும் பாராட்டும் வகையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றார். திருமணம் வரை பேசா மடந்தையென அழைக்கப்பட்ட திருமதி மங்கையர்கரசி பலரும் வியத்தகு வகையில் நல்ல சொற்பொழிவாளராய்த் திகழ்வதற்குக் காரணம் தனக்குப் பயிற்சியளித்த கணவரே என மிகுந்த அடக்கத்துடன் கூறுகிறார்.

2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலப் பெண்களுக்கான ஆணையம் இவருடைய சிறப்பான கல்விப்பணிகளைப் பாராட்டி, இவருக்கு 'Best Women Educationalist' என்ற உயரிய விருதை வழங்கிக் கௌரவித்தது, சேலம் கேளக்சி ரோட்டரி சங்கம் இவருக்கு 'மிகச் சிறந்த பெண் கல்வியாளர்' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்றிருந்த காலம் மாறி, பெண்களாலும் சாதிக்க முடியும் என்பதற்குச் சிறந்த உதாரணமாக விளங்குபவரும், எண்ணற்ற கிராமப்புற மாணவர்கள் தரமான, சிறப்பான கல்வியைப் பெற வைத்து, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றியவரும், பாவை திரு.நடராஜன் அவர்களின் புகழுக்குப் புகழ் சேர்த்துவருபவருமான திருமதி மங்கையர்கரசி நடராஜன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கி மகிழ்கிறது.



# கொங்கு சாதனையாளர்



## திரு. விஜய் கிருஷ்ணராஜ்

திரைப்பட இயக்குநர், நடிகர், எழுத்தாளர், பேச்சாளர், சமுதாயப் பற்றாளர் எனப் பன்முகம் கொண்டு புகழ் வானில் உள்ளவர், திரு.விஜய் கிருஷ்ணராஜ். இவர் பிறந்தது திருச்செங்கோடு குமரமங்கலம் அருகில் உள்ள ஆலாங்காடு பூதூர் எனும் ஊர். சென்னை சர்.தியாகராயர் கல்லூரியில் பட்டப்படிப்பு முடித்து, சென்னை பச்சையப்பன் கல்லூரி பள்ளியில் சில ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் ஆசிரியராகப் பணியாற்றிட இலக்கியப் புலமையை ஊட்டி வளர்த்தவர் தமிழறிஞர் சிலம்பொலியார் அவர்கள்.

சென்னைப் பல்கலைக்கழக நூல் நிலையத்தில் அமர்ந்து, முதல் கொங்கு கவுண்டர் இன நாடகமாக 'கல்தூணை' எழுதியவர் இவர். இது திரு.மேஜர் சுந்தர்ராஜன் அவர்களால் நாடக உலகில் மிகவும் பிரபலமாகியது. பின்னர், கலையுலக மார்க்கண்டேயன் திரு.சிவகுமாரின் 100ஆவது படமான திருப்பூர் மணி அவர்களின் தயாரிப்பில் வெளிவந்த 'ரோசாப்பூ ரவிக்கைக்காரி' படத்தின் மூலம் சினிமா உலகில் அறிமுகமானார்.

பின்னர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த ''கல்தூண்'', தேசிய விருது பெற்றவரும், நமது சங்க வளர்ச்சியில் பெரும் பங்குகொண்டுள்ளவருமான கொங்கு மாமணி திரு.கே.பழனியப்பன் அவர்களின் தயாரிப்பில் வெளிவந்த படமான ''உதிரிப்பூக்கள்'' ஆகிய படங்களின் திரைக்கதை; சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த ''ராணுவ வீரன்'', புரட்சித்திலகம் சத்யராஜ் மற்றும் ரேவதி நடித்த ''திறமை'', பிரபு, ராதிகா நடித்த ''நினைவுச் சின்னம்'', ''அண்ணன் என்னடா, தம்பி என்னடா'' எனப் பல வெற்றிப் படங்களில் வித்தியாசமான வில்லன்; அஜீத்துடன் வான்மதி, இரட்டை ஜடை வயசு; விஜய்யுடன் திருமலை; ''வாழ்க்கைச் சக்கரம்'' படத்தில் ஒரு நல்ல குணச்சித்திர நடிகர் எனக் கலைப்பயணம் செய்து, பங்குபெற்ற அனைத்திலும் முத்திரை பதித்தார்.

இன்று இவரது கலைப்பயணம் சின்னத்திரையிலும், வெற்றிகரமாகத் தொடர்கிறது. தான் பிறந்த கொங்கு மண்மேல் அளவு கடந்த பாசமும் பற்றும் கொண்டுள்ளார். அதன் பலனமாக, கவிச்சக்கரவர்த்தி கம்பர் எழுதிய நம் கொங்கு மங்கல வாழ்த்தை CD யாக வெளியிட்டுள்ளார். அது நம் உலகமெல்லாம் வாழ்ந்திடும் கொங்கு கவுண்டர் இன மக்கள் அனைவரிடத்திலும் மிகப் பிரபலம் ஆனது. பலராலும் பாராட்டப்பட்டது. கவுண்டர் வரலாற்றைச் சொல்லும் ''யார் இந்த கவுண்டர்கள் ?'', ''தீரன் சின்னமலையின்

கும்மிப் பாட்டுடன்'' நான்தாண்டா சின்னமலை'' என இவரால் வெளியிடப்பட்ட CD க்கள் அனைவரிடத்திலும் மிகுந்த வரவேற்பைப் பெற்றன. இவருடைய கொங்குச் சமுதாயப் பணி இடையறாமல் தொடர்கிறது. வெற்றி நடைபோட்டு வருகிறது.

மேற்கண்ட ஒலி நாடாக்கள் கொங்கு மக்களை இணைக்கும் சிறந்ததோர் உறவுப்பாலமாகத் திகழ்கின்றன என்றால் அது மிகையன்று.

அமெரிக்கா வாழ் கொங்கு சாதனையாளர், தொழில் அதிபர் திரு.செல்வம் அவர்களின் அழைப்பின் பேரில், சிறப்பு விருந்தினராக அமெரிக்கா கொங்குக் குடும்ப விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார். இவருடைய சிறப்புரை அமெரிக்காவில் உள்ள கொங்குக் குலமணிகளுக்கு நல்விருந்தாக அமைந்தது.

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச்செயளாளரும், நமது சங்கத்தின் முன்னாள் செயலாளரும், கொங்குச் சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட்டுவரும் இலட்சியவாதியுமான திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்களின் ஏற்பாட்டின் மூலம் சங்கச் செயலாளர் திரு. கே.கே.ரமேஷ் அவர்களோடு முதன் முதலாக லண்டன் மாநகரில் திரு.மகேஷ் மற்றும் நண்பர்கள் தலைமையில் நடைபெற்ற முதல் கொங்குக் குடும்ப விழாவில் சிறப்பு விருந்தினராய்ப் பங்கேற்றார். அண்மையில் மலேசியா உலகக் கொங்கு மாநாட்டிலும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பெருமைக்குரியவர் இவர். அம்மாநாட்டில் இவருக்கு 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கப்பட்டது.


''இவர் திரைப்படத்துறையில் புகழ்பெற்ற நடிகர், இயக்குநர்'' என்று பிறர் சொல்வதை விடவும், ''நம் கொங்குக் கலாச்சாரத்தை, உலகின் தலைசிறந்த நெ.1 கலாச்சாரம் எனப் பறைசாற்றி, அதன் புகழ் பரப்பி, நம் அடுத்த தலைமுறை கொங்கு இளைஞர்களும், பெண்களும் அதை மறக்காமல் அவர்களின் மனத்தில் பதியவைத்து, நம் கொங்கு இனத்தின் புகழ் பரப்புவதே தன் வாழ்நாளின் மிகப்பெரிய லட்சியமாக கொண்டுள்ளவர் இவர்'' எனக் கூறுவதையே பெரிதும் விரும்புகிறார்.

கண்ணங்குலத்தைச் சார்ந்த இவரின் மனைவி செம்பங்குலத்தைச் சேர்ந்த திருமதி பிரேமா. ரஞ்சிதம், பானு, அஜய் கிருஷ்ணா ஆகியோர் இவரது வாரிசுப் பட்டியல். அவர்கள் மூவருக்கும் திருமணமாகி நம் கொங்குப் பண்புகளோடு அந்தப் பட்டியல் தொடர்கிறது.

கொங்கு நாட்டின் நல்முத்தாக, கொங்குக் கலாச்சாரத்தை உலகமெல்லாம் எடுத்துச்செல்லும் தூதராக, திரைப்படத்துறையிலும் சின்னத்திரையிலும் மங்காப் புகழ்மிக்கவராக, பலரும் வாழ்த்திப் பாராட்டும் வண்ணம் சாதனைகள் பல நிகழ்த்தியவராக, கொங்குப் பண்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்திடும் திரு.விஜய் கிருஷ்ணராஜ் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டி மகிழ்கிறது.



# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் பி.வி.தனபால்

நாமக்கல் மாவட்டம், பட்டணம் கிராமத்தைச் சேர்ந்தவரும், பட்டணம் பேரூராட்சி முன்னாள் தலைவருமான திரு.ப.செ.வேலப்பன் – திருமதி அத்தாயி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர், டாக்டர் பி.வி.தனபால். 52 வயது நிறைந்தவர்.

1989 ஆம் ஆண்டு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் MBBS பட்டமும், 2000 ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் MS பட்டமும் பெற்றார். 1990 ஆம் ஆண்டு அரசுப்பணியில் சேர்ந்த இவர், 26 ஆண்டுகள் சீரிய முறையில், மிகுந்த அர்ப்பணிப்போடு பணியாற்றி, சிறந்த மருத்துவர், சிறந்த அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் மனிதநேய மருத்துவர் ஆகிய விருதுகளை இதுவரை 7 முறை பெற்றுச் சாதனை புரிந்துள்ளார்.

முதுகலை படிக்கும்போது தமிழ்நாடு அரசு டாக்டர் சங்கப் பட்டமேற்படிப்பு மாணவர்களின் மாநில இணைத்தலைவராய்ப் பணியாற்றினார். அரசு டாக்டர்கள் சங்க நாமக்கல் மாவட்டப் பொருளாளர் மற்றும் மாவட்டத் தலைவராய்த் திறம்படப் பணிபுரிந்தார். மேலும் தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கத்தின் பல்வேறு பொறுப்புகளையும் வகித்து, டாக்டர் நலன்களுக்காகவும் நோயாளிகளின் நலன்களுக்காகவும் பாடுபட்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் நல்லூரில் 1990 ஆம் ஆண்டு 1000 மரங்கள் நட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தி அபூர்வ மருத்துவர் என்ற பாராட்டுப் பெற்றார். பசுமைத் திட்டத்தின் முன்னோடிகளில் ஒருவர் இவர்.

அண்ணா பல்கலைக்கழக மருத்துவ நிலையத்தில் பணியாற்றியபோது, பல்வேறு சிறப்புப் பிரிவுகளைத் தொடங்கி மாணவர்கள் உடல் தகுதிச் சான்று அங்கேயே பெற ஏற்பாடு செய்தார். அதன் மூலம் ரூ. 2 கோடி வரை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வருமானம் ஈட்டித் தந்தார்.

ராசிபுரம் அரசு மருத்துவமனையில் பணியாற்றியபோது சுமார் 500 நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்து, சிறந்த 'அறுவை சிகிச்சை நிபுணர்' என்ற நுகர்வோர் பாதுகாப்புச் சங்க விருதைத் தொடர்ந்து 3 ஆண்டுகள் பெற்ற சாதனைக்குரியவர். 2011 ஆம் ஆண்டு சுழற்சங்கத்தின் 'சிறந்த டாக்டர்' விருதையும் பெற்றார்.

ராசிபுரம் வட்ட அளவில் ரத்த வங்கி மற்றும் கண் பிரிவு கட்டடம் புதிதாகத் தொடங்கி 'மனிதநேயம் காக்கும் மாமனிதர்' என்ற விருதைப் பெற்றவர்.

அரசு மருத்துவமனையில் பணியாற்றிய போது, 8 மாத காலத்தில் முற்றிலும் கணினி மயமாக்கப்பட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி, உள்தங்கும் நோயாளிகளுக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்து, மேலும் 20 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவமனை கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுத்தார்.

இவர் பணியாற்றிய காலத்தில் மருத்துவமனை நோயாளிகள் நாள் ஒன்றுக்கு 250 ஆக இருந்ததை 750 வரை அதிகரித்தது ஒரு சாதனையாகும்.

சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்வி மருத்துவமனையில் கடந்த 8 ஆண்டுகளாகப் பல துறைகளில் 10,000க்குக் மேற்பட்ட அறுவை சிகிச்சைகள் செய்து, மிகச் சிறப்பாகப் பணியாற்றி, பல்நோக்கு உயர் சிறப்புச் சிகிச்சை மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றியது இவரது சாதனைகளில் மேலும் ஒரு மைல்கல் ஆகும். மேலும், பல்வேறு நிர்வாகப் பதவிகளை ஏற்றுத் திறம்படப் பணிபுரிந்து தற்போது துணை மருத்துவக் கண்காணிப்பாளராகச் சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறார்.

இவரது மனைவி திருமதி பூர்ணிமா தனபால். முள்ளுக்குறிச்சி ஸ்ரீ சுவாமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் மற்றும் செயலாளராக உள்ளார். மகன் ஆர்.டி.நவின் இப்பள்ளியின் இயக்குநராய் உள்ளார். மகள் திருமதி ஆர்.டி.நேஹா எஸ்.ஆர்.எம்.மருத்துவக் கல்லூரியில் MBBS படித்து வருகிறார். மருமகன் திரு.ஆர்.அஸ்வின் முத்து, அரூர் அம்மன் கிரானைட்ஸ் நிறுவனங்களின் இயக்குநர். இவர் அம்மன் கிரானைட்ஸ் நிர்வாக இயக்குநர் திரு. முத்து இராமசாமி அவர்களின் மகனாவார். திரு.தனபால் அவர்களுடைய அண்ணன் திரு.பி.வி.கல்யாணசுந்தரம் பாலிமர் தொலைக்காட்சியின் மேலாண்மை இயக்குநர்.

சிறந்த அறுவை சிகிச்சை நிபுணர், திறமையான நிர்வாகி, அரசுப்பணியிலும் அர்ப்பணிப்புடன் அரும்பணியாற்றி, மருத்துவ வசதிகள், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு போன்றவற்றில் மிக்க கவனம் செலுத்துபவர், நோயாளிகளிடம் கனிவுடன் பேசி, தேவையான சிகிச்சை அளித்து அவர்களின் நலன் காக்கும் நல்ல மருத்துவர் முதலான பன்முகத்தன்மை கொண்டு, மருத்துவத் துறையில் சாதனைகள் பல புரிந்த இந்த மனிதநேய மருத்துவருக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டி மகிழ்கிறது.



# கொங்கு சாதனையாளர்



## திரு. து.செந்தில்குமார்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திருவேங்கடம் பாளையம் கிராமத்தில் பிறந்தவரும், சக்தி மசாலா குழும நிறுவனங்களின் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநரும், தொழில் சாதனைகளுக்காகவும், செய்த சேவைகளுக்காகவும் பல விருதுகளைப் பெற்றுள்ளவரும், கல்வி மற்றும் கொங்குச் சமுதாயப் பணியில் ஈடுபட்டு ஈரோட்டுக் கொடைவள்ளலாகத் திகழ்பவருமான கொங்குமாமணி டாக்டர் பி.சி.துரைசாமி – மேற்கண்ட நிறுவனங்களின் இயக்குநரும், எழுத்தாளர், இதழாளர், தொழில் முனைவோர், சமூக சேவையாளர், மாற்றுத் திறனாளிகளின் காவலர் முதலான பன்முகத் தன்மைகொண்டு விளங்குபவரும், மனிதநேயம், அயரா உழைப்பு, இன்சொல், விருந்தோம்பல், ஈகை போன்ற அரும்பண்புகளின் உறைவிடமாய்த் திகழ்பவரும், பெண்களால் சாதிக்க முடியும் என்று நிரூபித்துக்காட்டி, மற்ற பெண்களுக்கெல்லாம் ஒரு சிறந்த உதாரணமாய் விளங்குபவருமான டாக்டர் சாந்தி துரைசாமி ஆகியோரின் மகனாக 1982 ஆம் ஆண்டு பிறந்தவர், திரு.து.செந்தில்குமார். செம்பொன் குலத்தைச் சேர்ந்தவர். இவருடைய சகோதரி திருமதி சக்திதேவி இளங்கோ இல்லத்தரசியாக உள்ளார்.

இவருடைய மனைவி டாக்டர் தீபா செந்தில்குமார் மருத்துவர் மட்டுமின்றி, குவால்பிஷ் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநராகவும், சிறந்த இல்லத்தரசியாகவும் விளங்குகிறார். இத்தம்பதியருக்கு ஸ்ருதி என்னும் 8 வயது பெண்ணும், 2 வயது ஆண் குழந்தையும் உள்ளனர்.

திரு.செந்தில்குமார் B.Com., பட்டப்படிப்பை முடித்துவிட்டு, MBA பட்டம் பெற்றுள்ளார். குவால்பிஷ் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் (Qualfis Foods (P) Ltd.,) நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகவும், சக்தி அரோமேட்டிக் மசாலா பிரவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநராகவும் பொறுப்பேற்று மிகச்சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். உணவுப்பொருட்கள், உடல் ஆரோக்கியத்திற்கான பொருட்கள், உடல் பாதுகாப்புச் சம்பந்தமான பொருட்கள் முதலானவற்றைத் தயாரிப்பதிலும், கொள்முதல் செய்வதிலும், சந்தைப்படுத்துதலிலும் 15 ஆண்டுகளுக்கும் மேலானஅனுபவம் மிக்கவராகவும், செயலாற்றல் மிக்கவராயும் உள்ளார்.

குவால்பிஷ் ஃபுட்ஸ் பிரைவேட் லிமிடெட், சக்தி அரோமேட்டிக் மசாலா லிமிடெட் எனும் இரண்டு நிறுவனங்களின் தயாரிப்புகள் அனைவரிடமும், குறிப்பாக, பெண்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன.

2015 ஆம் ஆண்டு ஈரோடு நகரில் நடைபெற்ற CII மாநாட்டில் உணவுக்குழுவின் அமைப்பாளராய்ப் பணியாற்றினார். APEDA வர்த்தக சபை, ஈரோடு மாவட்டச் சிறு தொழில் முனைவோர் சங்கம், Retailer Association of India (RAI), கோவை கிளையின் Entreprenial (EO) Junior Chamber International, Lions Club International, Madras Cosmopolitan Club முதலான தொழில், கலாச்சார, கலை அமைப்புகளில் உறுப்பினராக உள்ள சிறப்புக்குரியவர் இவர்.

இந்த அமைப்புகள் வாயிலாகவும், தன் நிறுவனங்கள் மூலமாகவும், தன்னுடைய குடும்ப அறக்கட்டளை மூலமாகவும் திரு. செந்தில்குமார் சமூக சேவைகள் ஆற்றி வருவதுடன், நலிந்த ஏழைகளுக்கும், தன்னை அணுகும் வறியோர்க்கும், கல்வி கற்க உதவிகள் தேவைப்படும் மாணவர்களுக்கும், மருத்துவ வசதி தேவைப்படும் வசதியற்ற நோயாளிகளுக்கும் இல்லையென்று சொல்லாமல் மனமுவந்து மனித நேயத்துடன் தன்னாலியன்ற உதவிகளைச் செய்து வருகிறார்.

ஈரோடு கிளை Young Indians அமைப்பின் நிறுவனர் மற்றும் தலைவராகவும், தேசிய சுகாதாரக் குழு 2012 இணைத் தலைவராகவும், ஆட்சிமன்றக் குழுவின் (2013/2014) இணைத் தலைவராகவும், 2013, 2014, 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாரம்பரிய கலைகளின் திருவிழாவான 'வர்ணம்' ஈரோடு விழாவின் தலைவராகவும் பொறுப்பேற்றுப் பலரும் பாராட்டும் வகையில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டார்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, துருக்கி, வியட்நாம், மலேசியா, ஐக்கிய அரபு நாடுகள், மொரிசியஸ்,கென்யா, ஸ்ரீலங்கா முதலான நாடுகளுக்குச் சென்று தொழில் முன்னேற்றத்தையும், தயாரிப்பு நுணுக்கங்களையும் கண்டறிந்து வந்துள்ளார்.

கொங்கு நாட்டின் இருபெரும் சாதனையாளர்களைப் பெற்றோராகக் கொண்டுள்ள திரு. செந்தில்குமார், தானும் ஒரு சாதனையாளராய்ப் பெற்றோரும் சமுதாயமும் பெருமைப்படும் வகையில் விளங்குவதோடு சமூகப்பணி, சமுதாயப்பணி ஆகியவற்றிலும் சிறந்து விளங்குகிறார்.

தொழில் துறையில் திரு. செந்தில் குமார் அவர்கள் புரிந்துள்ள சாதனையைப் பாராட்டி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிச்சிறப்பிக்கிறது.



# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் கே.எஸ்.சித்தார்த்தன்

ஈரோடு அருகில் உள்ள குட்டப்பாளையம் என்ற சிறிய கிராமத்தில் தோன்றி, சட்டத்துறையில் நிபுணத்துவம் பெற்று ஒரு சிறந்த வழக்கறிஞராகவும், பின்னர், சென்னை உயர்நீதிமன்றத்தில் நாடு போற்றும் நீதியரசராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர் திரு. கே.பி.சிவசுப்பிரமணியம் அவர்கள். இவருடைய மனைவி திருமதி வசந்தாதேவி. இத்தம்பதியரின் மகனாகப் பிறந்தவர் டாக்டர் கே.எஸ்.சித்தாத்தன். இவருடைய தாத்தா தெய்வத்திரு கே.எஸ்.பழனிசாமி அவர்களும் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதியரசராய்ப் பணியாற்றிப் பெரும்புகழ் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் சித்தார்த்தன் பள்ளிப்படிப்பைச் சென்னை St.Bede's Anglo Indian Higher Secondary School இல் முடித்தார். MBBS பட்டப் படிப்பைச் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழத்தில் இணைந்துள்ள இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரியில் 2000 ஆம் ஆண்டு முடித்தார். மருத்துவப் பயிற்சியை 2001 ஆம் ஆண்டு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் முடித்தார்.

2001 ஆம் ஆண்டு மதுரையில் உள்ள அரவிந்த் கண் மருத்துவமனை மற்றும் முதுநிலை கண் மருத்துவ நிறுவனத்தில் சேர்ந்து Diploma in Ophthalmology எனும் உயர் கல்வியை 2003 ஆம் ஆண்டு முடித்தார். அரவிந்த் கண் மருத்துவப் பாதுகாப்பு முறையின் நிறுவனர் டாக்டர் ஜி.வெங்கடசாமி அவர்களிடம் பயிற்சி பெற்றதை ஒரு பேறாகக் கருதுகிறார் இவர்.

பின்னர், கோவை அரவிந்த் கண் மருத்துவமனை மற்றும் முதுநிலைக்கல்வி நிறுவனத்தில் 2005 ஆம் ஆண்டு DNB பட்டமும், Fellowship in Cornea, Refractive and External Diseases பட்டமும் பெற்றார். 2006 ஆம் ஆண்டு FRCS பட்டமும் பெற்றதோடு, அமெரிக்காவில் உள்ள Modern Eye Centre இல் மூன்று மாத உயரிய பயிற்சியையும் பெற்றார்.

PHACO LASIK மற்றும் ACT அறுவை சிகிச்சை செய்வதில் நிபுணத்துவம் பெற்றவர். இதுவரை DALK, DESK, PSAEK, DMEK முதலான சிறப்பு அறுவை சிகிச்சைகள் 750க்கும்மேல் வெற்றிகரமாகச் செய்து சாதனை படைத்துள்ளார். கண் சம்பந்தப்பட்ட பலவிதச் சிக்கலான நோய்களுக்கும் மிகச்சிறப்பான முறையில் சிகிச்சை செய்வதில் இவருக்கு நிகர் இவரே.

பன்னாட்டுக் கருத்தரங்குகள் பலவற்றில் கலந்துகொண்டதோடு, கட்டுரைகள் பலவற்றையும் வெளியிட்டுள்ளார். Best Video Award for Corneal Surgical Techniques, Captian Subramaniam Gold Medal போன்ற உயரிய விருதுகளைப் பெற்றுள்ள இவர் Dmek முறையில் தமிழகத்திலேயே அதிக அளவில் அறுவை சிகிச்சைகள் புரிந்து சாதனை படைத்துள்ளார். ஐந்து மருத்துவ நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

இவற்றுக்கு இடையிலும், குட்டபாளையத்தில் 40 ஏக்கர் நிலத்தில் தீவிர விவசாயம் செய்து வருகிறார் என்பது யாரையும் வியப்பில் ஆழ்த்தும். ஒவ்வோர் வாரத்தின் இறுதியிலும், குட்டப்பாளையம் கிராமத்திற்குச் சென்று, விவசாயப் பணிகளில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகிறார். மெத்த படித்தவர்கள் ஆர்வத்துடன் விவசாயம் செய்வதில்லை என்பதையும், விவசாய நிலத்தில் கால்பதித்து, உழவுத் தொழில் சார்ந்த பணிகளில் ஈடுபடுவது பெருமையாகக் கருதப்படுவதில்லை என்பதோடு, போதிய வருமானம் வராத தொழிலான உழவுத் தொழிலில் கவனம் செலுத்துவதும், அதற்கென்று நேரம் ஒதுக்குவதும் உகந்த செயலல்ல என்பதையும் மறுத்துக் கூறுவதற்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்க்கிறார் டாக்டர் சித்தார்த்தன். இன்றைய இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட ஊக்கமும், உற்சாகமும் தருவதாக இவரது செயல்பாடு உள்ளது.

தன்னுடைய தாத்தா நினைவாக, ஒவ்வோராண்டும் நடுபாளையம் கிராமத்தில் இலவச மருத்துவமுகாம் நடத்தி, கிராமப்புற ஏழைகள் பலரும் கண் சிகிச்சை பெற உதவி வருகிறார்.

இவருடைய மனைவி திருமதி சௌந்தர்யா. இத்தம்பதியருக்கு ஒரு மகள் உள்ளார்.

கண் மருத்துவத்தில் நிபுணத்துவம் பெற்று, தமிழகத்திலேயே சிறந்த கண்மருத்துவர்களுள் ஒருவராகவும், தமிழகத்திற்கும், குறிப்பாக, கொங்குச் சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளவராகவும், சாதனைகள் பலவற்றை ஓசையின்றிச் செய்துவருபவருவமான டாக்டர் கே.எஸ்.சித்தார்த்தன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.



# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் பி.பிரவீன்ராஜ்

கோவை ஜெம் மருத்துவமனை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் தலைவரும், லேப்ராஸ்கோப்பி அறுவை சிகிச்சையை இந்தியாவில் முதன்முதலாக அறிமுகப்படுத்தி உலக அளவில் முன்னோடி மருத்துவராக விளங்குபவரும், கல்லூரியில் படித்தபோது கொங்கு மாணவர் சங்கத் தலைவராய் இருந்ததோடு, கோவையில் கொங்கு மாணவர்கள் பேரணியை நடத்தியதில் முக்கியப்பங்கு கொண்டவரும், டாக்டர் பி.சி.ராய் விருது, இந்தியக் குடியரசுத் தலைவர் விருது, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் 'கொங்குமாமணி' விருது, தமிழக அரசின் சிறந்த மருத்துவர் விருது முதலான உயரிய விருதுகள் பலவற்றைப் பெற்றுக் கொங்குச் சமுதாயத்திற்கும், தமிழகத்திற்கும் பெரும் பெருமை தேடித் தந்துள்ளவருமான டாக்டர் சி.பழனிவேலு – திருமதி ஜெயா தம்பதியரின் மகனாக 1982 ஆண்டு பிறந்தவர், டாக்டர் ப.பிரவீன்ராஜ். கூரை கூட்டத்தைச் சேர்ந்தவர்.

இவர் கோவை பி.எஸ்.ஜி.மருத்துவக் கல்லூரியில் MBBS முடித்து, சென்னை இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் எம்.எஸ். (பொது அறுவைச் சிகிச்சை) பட்டமும், கோவை ஜெம் மருத்துவ மனையில் கேஸ்ட்ரோஎன்ட்ராலாஜியில் நிபுணத்துவமும் பெற்றுள்ளார். தனது சிறப்புத் துறையான (உடல் பருமன் அறுவை சிகிச்சை) Bariatric Surgery யை ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவில் பயின்று நிபுணத்துவம் பெற்றுள்ளார்.

தற்போது, கோவை ஜெம் மருத்துவமனை, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில், நுண்துளை உடல் பருமன் மற்றும் வளர்சிதை மாற்றுச் சிகிச்சைத் துறையின் ஆலோசகர் மற்றும் தலைமை மருத்துவராகவும், இந்திய உடல்பருமன் அறுவை சிகிச்சைப் பிரிவின் தலைவராகவும் பொறுப்பேற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருபவர், டாக்டர் பிரவின்ராஜ்.

இன்றைய வாழ்க்கை முறை மற்றும் உணவு முறை காரணமாக உடல் பருமன் மற்றும் அதன் துணை நோய்களான சர்க்கரை நோய், அதிகப்படியான கொலஸ்ட்ரால், அதிக ரத்த அழுத்தம், கல்லீரல்

கோளாறுகள், மலட்டுத்தன்மை போன்ற நோய்களால் மக்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். உடல் பருமன் சிகிச்சை 2003 ஆம் ஆண்டிலிருந்தே ஜெம் மருத்துவமனையில் செயல்படத் தொடங்கியது. ஆனால், இம்மருத்துவமனையில் உடல் பருமன், கட்டுப்படாத சர்க்கரைநோய், அதிக கொலஸ்ட்ரால் ஆகியவற்றை லேப்ராஸ்கோப்பி அறுவை சிகிச்சை மூலம் சரி செய்யும் சிறப்புத் துறையை டாக்டர் பிரவீன்ராஜ், 2010 ஆம் ஆண்டு துவக்கி வெற்றிகரமாக நடத்தி வருகிறார். இத்துறையில் இவர் தேசிய அளவில் முதன்மையாகத் திகழ்கிறார். மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, வளைகுடா நாடுகள் போன்ற வெளிநாடுகளில் இருந்தும் இங்குச் சிறப்புச் சிகிச்சை பெற்றிட நோயாளிகள் வருகிறார்கள். சிகிச்சை முடிந்து மன நிறைவுடனும், மகிழ்ச்சியுடனும் திரும்புகின்றனர். சிகிச்சையின் மூலம் பலன் பெற்ற பலரும், பாராட்டுகளைத் தெரிவித்து வருகின்றனர்.

டாக்டர் பி.பிரவீன்ராஜ் நிறுவியுள்ள உடல்பருமன் மற்றும் சர்க்கரை நோய்க்கான அறுவை சிகிச்சை மையம், தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட சிறப்புக் கொண்டதாகும், Laprofit 2014 எனும் 900க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் வலைத்தளம் மூலம் பங்கேற்ற வலைத்தள மாநாட்டை உலக அளவில் சிறப்பாக நடத்தினார்.

''சர்க்கரை நோய் அறுவை சிகிச்சை என்பது சர்க்கரை நோய் மற்றும் அதன் தொடர்பான அனைத்துப் பிரச்சனைகளுக்கும் வயிறு மற்றும் சிறுகுடலில் செய்யப்படுவதாகும். BMI-27 க்கும்அதிகமாக உள்ளவர்களுடைய இரண்டாம் வகை சர்க்கரை நோயை முற்றிலும் குணப்படுத்தலாம். நோயாளி இன்சுலின் எடுப்பவராக இருந்தாலும் அல்லது சர்க்கரை கட்டுப்பாட்டில் இருந்தாலும் சிகிச்சை பொருந்தும். இச்சிகிச்சையினால் சர்க்கரை நோய் இல்லாத ஒரு புதிய உணர்வும், எடை இழப்பும் உண்டாகும்'' என்கிறார், டாக்டர் பிரன்வீன்ராஜ்.

இவருடைய சிறப்பான சேவைகளுக்காக ரோட்டரியின் 'Vocational Excellence Award' எனும் விருதைப் பெற்றார். உடல் பருமனுக்கான இரைப்பை மாற்றுவழி அறுவை சிகிச்சையைப் லேப்ராஸ்கோப்பி முறையில் ஒரே துளையின் மூலம் செய்த முதல் இந்திய மருத்துவர் என்ற சிறப்புப் பெற்றுள்ளவர், இவர். 2007 ஆம் ஆண்டு 'அமெரிக்க அறுவை சிகிச்சை நிபுணர் இரைப்பைப் புற்று அறுவை சிகிச்சைக்கான சிறந்த வீடியோ விருது, 2010 ஆம் ஆண்டு ஜெய்ப்பூரில் நடைபெற்ற மாநாட்டில் லேப்ரோஸ்கோப்பி முறையில் சிறந்த அறுவை சிகிச்சைக்கான தங்கப்பதக்கம், ஜப்பான் நாட்டின் Best Plenary Paper - விருது, 2011 ஆம் ஆண்டு சிறந்த சர்வதேச சுருக்கம் விருது, 2014 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற மாநாட்டில் உடல் பருமன் மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரைக்கான 'Top International Award' போன்ற உயரிய விருதுகளைப் பெற்றுள்ளார். 50க்கும் மேற்பட்ட சர்வதேசக் கருத்தரங்குகளில் கலந்துகொண்டதோடு, சிறந்த பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார்.

15 உடல் பருமன் அறுவை சிகிச்சை மாநாடுகளை நடத்தியுள்ள இவர், 2015 ஆம் ஆண்டுக்கான கோவை ரோட்டரி சங்கத்தின் Occsional Excellence Award, 2015 ஆம் ஆண்டுக்கான சிறப்பு மருத்துவ ஆய்வாளர் விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

கடுமையான உழைப்பாளி, திறமையான மருத்துவர், சிறந்த நிர்வாகி எனப் பன்முகம் கொண்டு விளங்கும் டாக்டர் பிரவீன்ராஜ், டாக்டர் பழனிவேல் எனும் அப்பா வழியில் தப்பாது பிறந்த மகன் என்றால் அது சரியல்ல. ஏனெனில் அப்பா 8 அடி என்றால் இவர் 16 அடி தாண்டுகிறார். அப்பாவை மிஞ்சும் மகன் இவர். இவருடைய மனைவி திருமதி பிரபா இல்லத்தரசி; கணவரின் சாதனைக்குத் துணை நிற்கிறார், மகன் அகி பிரவீன்.

மருத்துவத்துறையில் சாதனைகள் பல புரிந்து கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை தேடித் தந்துள்ள டாக்டர் பிரவீன்ராஜ் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.



# கொங்கு சாதனையாளர்



## செல்வி பூவிதா சுப்பிரமணியன் ஐ.ஏ.எஸ்.

கரூர் மாவட்டம், மூர்த்திபாளையம் என்ற கிராமத்தைச் சேர்ந்த திரு.சுப்பிரமணியன் –திருமதி பாப்பாத்தி தம்பதியருக்கு 1988 ஆம் ஆண்டு மூத்த மகளாகப் பிறந்தவர், செல்வி பூவீதா சுப்பிரமணியம். உடன் பிறந்தோர் நந்தினி எனும் ஒரு தங்கை மற்றும் ஒரு தம்பி. தங்கை செல்வி நந்தினி எம்பிஏ (MBA) முடித்துள்ளார். தம்பி செல்வன் மலையப்பசாமி B.Tech முடித்துள்ளார்.

இவருடைய கூட்டம் பொருள்தந்த கூட்டம். ஆனால் பொருள் இல்லாத எளிய குடும்பம் இவருடையது. பூவிதாவின் பெற்றோர் முதலில் பால் வியாபாரம் செய்து கொண்டிருந்தனர். பிறகு “பூவிதா மெஸ்” என்ற பெயரில் சிறிய அளவில் ஓர் உணவு விடுதியைக் கரூரில் நடத்தி வந்தனர். அதிகம் படிக்காதவர்கள், ஆனால் குழந்தைகளுக்குச் சிறந்த கல்வியளிக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டு, கடுமையாக உழைத்தவர்கள், தற்போதும் அயராது உழைப்பவர்கள்.

இளம் வயது முதலே செல்வி பூவிதா படிப்பில் மிகவும் ஈடுபாட்டுடனும், படுசுட்டியாகவும் இருந்தார். பள்ளிப்படிப்பை கரூர் சேரன் மெட்ரிகுலேசன் உயர்நிலைப்பள்ளியில் முடித்தார். பள்ளியில் படித்தபோதே அனைத்துப் பாடங்களிலும், தேர்வுகளில் முதலிடம் அல்லது இரண்டாம் இடம் பிடித்துப் பரிசுகளையும், பாராட்டுகளையும் பெற்றார். பின்னர், கோவை குமரகுரு பொறியியல் கல்லூரியில் சேர்ந்து, 2009 ஆம் ஆண்டு, B.Tech, (Fashion Technology) பட்டம் பெற்றார்.

Fashion Technology துறையில் அண்ணா பல்கலைக்கழகத்திலேயே முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்று, தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்தார். பின்னர், Infosys நிறுவனத்தில் மென்பொருள் பொறியாளராய் வேலைக்குச் சேந்தார். சென்னையில் இந்தப் புகழ்பெற்ற IT நிறுவனத்தில் நல்ல சம்பளத்துடன் சுமார் இரண்டு வருடம் பணியாற்றிய பின்னர், ஐஏஎஸ் அலுவலர் ஆக வேண்டும் என்ற வேட்கையில் வேலையிலிருந்து விலகினார்.

UPSC குடிமைப்பணிகள் தேர்வுகளுக்குத் தயார் செய்து கொள்ள டெல்லி சென்றார். 2012 ஆம் ஆண்டு முதல் முறை முயற்சியில் தேர்வில் வெற்றிபெறவில்லை. விடாமுயற்சியுடன் மறுபடியும் டெல்லியிலும், சென்னையில் சங்கர் அகாடமியிலும் பயிற்சி எடுத்துக் கடுமையாக உழைத்து, 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற UPSC தேர்வுகளில் வெற்றி பெற்றார்.

ஆனால் அகில இந்திய அளவில் தேவையான Rank கிடைக்காததால் IAS பணி கிடைக்கவில்லை. இருப்பினும், Railway Personnel Service (RPS) பணியில் சேர்ந்தார். Railways இல் பணி புரிந்து கொண்டே மீண்டும் மூன்றாம் முறை முயற்சி செய்து 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்வில் All India Rank 175 எடுத்து, IAS பதவிக்குத் தேர்வு பெற்றுச் சாதனை படைத்துள்ளார். விரைவில் IAS பணிப் பயிற்சிக்கு முசௌரி நகரில் உள்ள IAS Training Academy - இல் சேர்வதற்குச் செல்ல உள்ளார்.

UPSC இறுதித் தேர்வுகள் எழுதும்போது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தீரன் சின்னமலை மாளிகையில் தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

அறிவும் ஆற்றலும் திறமையும் நிறைந்துள்ள கொங்குச் சமுதாயப் பட்டதாரிப் பெண்களும், இளைஞர்களும் IAS, IPS முதலான பதவிகளில் சேர்வதற்கு, அதிக அளவில் குடிமைப்பணித் தேர்வுகளை எழுதவேண்டும் என நமது சங்கம் வலியுறுத்தி வருகிறது. உழைப்பிற்கும், அறிவாற்றலுக்கும் பெயர்பெற்ற நமது இளைஞர்களும் பெண்களும் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் சேவை செய்திடவும், சமூக அந்தஸ்து பெறவும் இப்பணிகளில் சேர முயற்சிப்பது அவசியம். கிடைத்தால் வெற்றி; கிடைக்காவிட்டால், இழப்பதற்கு ஒன்றுமில்லை. இந்த வகையில், தேர்வுகள் எழுதி, வெற்றியும் பெற்றுள்ள சிறப்புக்குரியவர், செல்வி பூவிதா சுப்பிரமணியம்.

மிகவும் சாதாரணக் குடும்பத்தில் பிறந்து தனது ஓய்வறியா உழைப்பாலும், அசராத தன்னம்பிக்கையாலும் விடாமுயற்சியாலும் IAS அலுவலராக உயர்ந்து கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை தேடித் தந்துள்ளதோடு, முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்பதற்குச் சிறந்த உதாரணமாகவும், குடிமைப்பணிகள் எழுதுகின்ற நம்முடைய கொங்குக்குலப் பெண்களுக்கு ஊக்கமளிப்பவராகவும் உள்ள செல்வி பூவிதா சுப்பிரமணியன் அவர்களுக்கு 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் மகிழ்ச்சி அடைகிறது.

மகளுக்குப் பெருந்துணையாக நின்று, ஊக்கமளித்து வெற்றிக்கனியைப் பறிக்கக் காரணமாயிருந்த செல்வி பூவிதாவின் பெற்றோர் திரு.சுப்பிரமணியன், திருமதி பாப்பாத்தி ஆகியோரைச் சங்கம் பாராட்டுகிறது.

'முயற்சி திருவினையாக்கும்' என்பதை நிரூபித்துக்காட்டியுள்ள செல்வி பூவிதா தான் ஏற்கவுள்ள பணிகளில் சிறந்து விளங்கி வெற்றிகள் பல பெறவேண்டி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகிறது.



# கொங்கு சாதனையாளர்



## திரு. வி.கிருஷ்ணன்

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் மல்லிய கரையைச் சேர்ந்த திரு. வேலப்ப கவுண்டர் – திருமதி பெருமாயி தம்பதியரின் புதல்வனாக மோரூர் குலத்தில் பிறந்தவர், திரு.வி.கிருஷ்ணன்.

P.U.C. வகுப்பினைக் காட்டுக்கோட்டைக் கல்லூரியில் முடித்த இவர், 1967 ஆம் ஆண்டு முதலே தனது தந்தையுடன் சேகோ தொழிலில் இணைந்து, ஆர்வமுடன் செயலாற்றிக்கொண்டு வந்துள்ளார். ஸ்டார்ச்சு மாவினைச் சிறுசிறு உருண்டைகளாகச் செய்யும் ஓர் எந்திரத்தை உருவாக்கியுள்ளார். மல்லியகரை கருத்தராஜாபாளையத்தில் ஸ்ரீவேல்முருகன் சேகோ பேக்டரி எனும் தொழிற்சாலையை நடத்தி வருகிறார்.

சேகோ தொழிலில் அரிசியில் கல்லை நீக்கும் எந்திரத்தைக் கண்டுபிடித்துள்ளார். இவரது கண்டுபிடிப்பு, ஆள் பற்றாக்குறையைத் தீர்ப்பதோடு, பொருளாதார ரீதியில் பெரும் பயனைக் கொடுக்கும் என்கிறார், திரு.கிருஷ்ணன். 09–03–2012 அன்று இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை, இவரது சேகோ ரோஸ்டிங் மெஷின் கண்டுபிடிப்பினைப் பாராட்டிப் பரிசு வழங்கியுள்ளது.

ஜவ்வரிசித் தொழிற்சாலையில் சைசிங் மற்றும் ரோஸ்டிங் பிரிவில் இயந்திரமயமாக்கும் முயற்சிகளில் வெற்றிபெற்று அதைத் தன் தொழிற்சாலையில் நடைமுறைப்படுத்தியுள்ளார், திரு.கிருஷ்ணன். இந்திய அளவில் மொத்த சேகோ உற்பத்தியில் சேலம், நாமக்கல் மாவட்டங்களின் பங்களிப்புத்தான் மிகவும் அதிகம். சேலம், நாமக்கல், தருமபுரி ஆகிய பகுதிகளில்தான் கிழங்கு அதிக அளவில் பயிரிடப்படுகிறது. இப்பகுதிகளில்தான் கிழங்கு அரவை ஆலைகள் அதிகமாக உள்ளன.

வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறையால், சேகோ தொழில் அழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. தொழிலில் போதிய வருமானம் இல்லை. இத்தகைய நெருக்கடியான காலகட்டத்தில், தனது சொந்த அறிவுத்திறனாலும், விடா முயற்சியாலும் தன் சொந்தப் பணத்தைப் பெருமளவு செலவு செய்து, கிழங்கு சுத்தம் செய்தல், கிழங்கு அரவு செய்தல், ஜவ்வரிசியை இயற்கையான முறையில் உலர்த்துதல் முதலான வேலைகளுக்குப் புதிய உத்திகளைக் கையாண்டு, சில நவீன இயந்திரங்களை உருவாக்கிச் சாதனை படைத்துள்ளார்.

தமிழகத்தில் சேகோ பேக்டரி தொடர்பான அனைத்து வேலைகளையும் புதிதாக உருவாக்கப்பட்ட இயந்திரங்கள் மூலம் செய்து காட்டியுள்ளார் இவர். அதன் பயனாகச் செலவைக் குறைத்ததோடு, ஆள் பற்றாக்குறை பிரச்சினையையும் சமாளித்துள்ளார். வேலைகளை எளிதாகவும், குறைந்த நேரத்திலும் செய்து சேகோ பேக்டரி தொழில் முன்னேற்றத்திற்குப் பெரிதும் வழி வகுத்துச் சாதனை படைத்துள்ளார்.

சேகோ பேக்டரித் தொழிலில் ஈடுபட்டுள்ள பலரும் இந்த இயந்திரங்களை வாங்கிப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர் என்பது இவரது தளராத முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும். தமிழகத்தில் முதன்முதலான இந்த இயந்திரங்களைப் பயன்படுத்தி வெற்றி கண்டவர் என்ற பெருகைக்குரியவர் இவர்.

சேகோ ரோஸ்டிங் மெசின் உருவாக்கியுள்ள இவருடைய சாதனையைப் பாராட்டி National Innovotion Foundation - India என்ற அமைப்பு விருது வழங்கியுள்ளது. Sago Rice Roasting Machine எனும் இயந்திரத்தை உருவாக்கி, அதன்மூலம் நேரத்தை மிச்சப்படுத்திடவும், வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை பிரச்சினையைத் தீர்த்திடவும், இயந்திரம் சீரான முறையில் இயங்கிடவும் வழிவகை செய்து சேகோ தொழிலில் மறுமலர்ச்சி ஏற்பட வழிவகுத்தவர் என்ற பெருமைக்குரியவர் இவர். இதற்காகப் பாவை பொறியியல் கல்லூரி, ‘கொங்குச் செய்தி’ மாத இதழ், நாமக்கல் நகரம் ஆகியவற்றில் சார்பில் பாராட்டு விழாக்கள் நடத்தப்பட்டன.

கொங்குச் சமுதாய மக்கள்தான் இத்தொழிலில் பெரிதும் ஈடுபட்டு வருகின்றனர். இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 70 (எழுபது) சதவீதம் கொங்கு நாட்டுப் பகுதியில்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக, சேலம், நாமக்கல் மாவட்டங்களில்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. பாயசம், கிச்சிடி, வடை போன்ற உணவுப் பண்டங்களுக்குத் தேவையான ஜவ்வரிசியை உற்பத்தி செய்யும் இத்தொழிற்சாலைகள் ஆள்பற்றாக்குறை போன்ற காரணங்களால் நலிவடைந்தால், தொழில் முனைவோர்கள் மட்டுமல்லாமல், குச்சிக்கிழங்கு பயிரிடும் விவசாயப் பெருங்குடி மக்களும் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவர். இத்தகைய சூழ்நிலையில் திரு. கிருஷ்ணன் அவர்கள், தன்னுடைய அரிய முயற்சி மற்றும் ஆற்றல் மூலம் புதிய இயந்திரங்களை உருவாக்கியது மிகவும் போற்றத்தக்கது.

சேகோ பேக்டரி தொழிலில் புதிய இயந்திரங்களை உருவாக்கி அவற்றை முதன் முதலில் தானே பயன்படுத்தி வெற்றி கண்டுள்ள திரு.கிருஷ்ணன் அவர்களுடைய சாதனையைப் பாராட்டி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.



# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் எம்.மகேஷ்வரி

நாமக்கல் மாவட்டம், தாமரைப்பட்டி என்னும் சிற்றூரில் விவசாயக் குடும்பத்தில் திரு.முத்து நல்லியப்பன் – திருமதி சரஸ்வதி தம்பதியருக்கு 1965 ஆம் ஆண்டு மகளாகப் பிறந்தவர், டாக்டர் (திருமதி) மகேஷ்வரி.

பள்ளிப்படிப்பை முடித்தவுடன் இவர் விவசாயத்தின் மீது கொண்டிருந்த பற்றுக் காரணமாகக் கோவையில் உள்ள தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து B.Sc., (Agri) பட்டம் பெற்றார். பின்னர், அதே பல்கலைக்கழகத்தில் 1988 ஆம் ஆண்டு M.Sc., (Agricultural Biology) பட்டம், பெற்றதோடு, பல்கலைக்கழகத்திலேயே முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றார்.

சில ஆண்டுகள் பணியாற்றிய பின்னர், மேற்படிப்பில் சேர்ந்து, தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்தில் சுற்றுப்புற விஞ்ஞானம் (Environmental Science) என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு, 2002 ஆம் ஆண்டு Ph.D., பட்டம் பெற்றார்.

இயற்கையோடு இயைந்து மாசுபடாத காற்று, மாசுபடாத நீர் ஆகியவற்றோடு, தூய்மையான சுற்றுப்புறச் சூழலில் இயற்கை விஞ்ஞான முறையில் நம் முன்னோர்கள் உழவுத்தொழிலை மேற்கொண்டு, அதில் விளையும் பொருள்களை உணவுகளாகக் கொண்டு நிம்மதியாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்ந்துவந்தனர். ஆனால் இன்று சுற்றுப்புறச் சூழல் எங்கும் கெட்டுக்கிடக்கிறது. பலவகையான இரசாயனப் பொருட்களையும், செயற்கை முறைகளையும் பயன்படுத்துவதால் விளைபொருள்கள் நோய்களை உருவாக்குகின்றன. இத்தகைய சூழ்நிலையில், சுற்றுப்புறச்சூழல் விஞ்ஞானத்தில் நிபுணத்துவம் பெற்று, அதைக் கற்பிக்கும் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சாதனை படைத்துள்ளவர், டாக்டர் மகேஷ்வரி.

1995 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டுவரை திருச்சியில் அமைந்துள்ள அன்பில் தர்மலிங்கம் விவசாயக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், மண் வள விஞ்ஞானம் மற்றும் விவசாய வேதியல் (Department of Soil Science and Agricultural Chemistry) துறையில், 2005 ஆம் ஆண்டு வரை, சுற்றுப்புறச்சூழல் விஞ்ஞான உதவிப் பேராசிரியையாகவும், 2005 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டுவரை இணைப் பேராசிரியையாகவும், 2012 ஆம் ஆண்டு முதல் பேராசிரியையாகவும் மிகவும் சிறப்பாய்ப் பணியாற்றி வருகிறார்.

கல்லூரியில் எண்ணற்ற மாணவர்களுக்கு M.Sc., மற்றும் Ph.D., முடிப்பதற்கு நெறியாளராய் இருந்துள்ளார். இவரிடம் கல்வி கற்ற பலர் இன்று சிறப்பு வாய்ந்த பொறுப்புகளில் உள்ளனர் என்பது இவருக்கு மகிழ்ச்சியும் பெருமையும் சேர்த்திடும் என்பது உறுதி.

கல்லூரியிலும், பல்கலைக்கழகத்திலும் பல திட்டப்பணிகளை வெற்றிகரமாக முடித்துள்ளார். அகில இந்திய அளவில் அமைக்கப்பட்ட வெள்ளச் சேத ஆய்வு, விதை காண்காணிப்பு முதலான குழுக்களில் தமிழக அரசாலும், தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்தாலும் நியமிக்கப்பட்ட இவர், தன்னுடைய பணிகளை மிகவும் சிறப்பாகச் செய்துமுடித்துப் பலருடைய பாராட்டுகளையும் பெற்றுள்ளார். கல்லூரிகளிலும், பல நிறுவனங்களிலும் பணிபுரியும் அலுவலர்கட்குப் பல பயிற்சி வகுப்புகள் நடத்தியுள்ளார். கல்வியை நவீன முறையில் கற்றுத்தருவதற்கான CD, DVD, Video, Short Flims போன்றவற்றை உருவாக்கியுள்ளார். விவசாயிகளைச் சந்தித்து, அவர்களுக்குத் தகுந்த ஆலோசனைகளைக் கூறி வருகின்றார்.

டாக்டர் மகேஷ்வரி சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு, இயற்கை விஞ்ஞானம், சுற்றுச் சூழல் விஞ்ஞானம் போன்ற துறைகள் சார்ந்த அகில இந்திய அளவில் நடத்தப்பட்ட எண்ணற்ற மாநாடுகள், கருத்தரங்குகள், ஆய்வுக்கூட்டங்கள் முதலானவற்றில் கலந்துகொண்டதோடு, பல சிறப்புமிகு கட்டுரைகளையும் படைத்துள்ளார்.

சிறந்த முனைவர் பட்ட ஆய்வேட்டிற்காக எஸ்.கே.மயிலானந்தம் விருது, NESA விருது, பல்கலைக்கழகம் வழங்கிய ‘முதல் விஞ்ஞானி’ விருது போன்றவை இவருடைய சிறந்த பணிகளைப் பாராட்டி வழங்கப்பட்டுள்ள விருதுகளுள் குறிப்பிடத்தக்கன. தேசிய அளவில் பல உயரிய அமைப்புகளில் உறுப்பினராய் உள்ளார்.

இவருக்கு திருமதி திவ்யா என்ற மகள் உள்ளார். மருமகன் திரு.சி.சேகர் மும்பையில் L & T நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார்.

ஆசிரியப் பணி புனிதமானது. சுற்றுப்புறச் சூழல் காப்பது இன்றியமையாதது. விவசாயத் தொழில் அதிமுக்கியமானது. இவை மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற கல்வியில் சிறந்த நிபுணத்துவம் பெற்று, சிறப்புமிகு பேராசிரியையாய்ப் பணியாற்றிச் சாதனைகள் பல புரிந்துள்ள டாக்டர் மகேஷ்வரி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.



# வெளிநாடு கொங்கு சாதனையாளர்



## திரு. ஆ.கோபால்

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

தன்னுடைய ஐந்தாம் வயதில், தந்தையை இழந்த தம்மையும், தம்முடைய மூத்த மூன்று சகோதரிகளையும் தனி ஒருவராக வளர்த்த தன் அன்னைக்கு மகன் திரு. ஆ.கோபால் வழங்கிய பரிசு மேற்காண் குறளின் செயல்படிவம்.

1970 ஆம் ஆண்டு இலங்கை கொழும்பு மாநகரில் பிறந்த இவரின் பூர்வீகம் நாமக்கல் மாவட்டத்திலுள்ள இராமநாதபுரம். தந்தை ஆறுமுகம், தாயார் சிவகாமி. தன் பள்ளிப்படிப்பைக் கொழும்பு வெஸ்லி காலேஜ் மற்றும் தமிழ்நாட்டில் பரமத்தி வேலூர், பாண்டமங்கலம் அரசு மேனிலைப் பள்ளியிலும் முடித்தார். பின்னர், கோவை வேளாண் கல்லூரியில் சேர்ந்து B.Sc., (Agri) பட்டம் பெற்றார்.

கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் இவர் சென்றடைந்தது கனடா நாட்டிற்கு. அங்குச் சென்றபோது இவர் தன்னுடன் கொண்டு சென்ற மூலதனம் உழைப்பும், தன்னம்பிக்கை மட்டுமே. வாழ்வில் சந்தித்த இன்னல்களை மதி நுட்பத்துடன் வென்று, இன்று பல துறை தொழில்களிலும், குறிப்பாக Gas Station, Hotel, Real Estate போன்றவற்றில் ஈடுபட்டு, இன்று கனடா நாட்டில் சிறந்த தொழில் முனைவோராக உள்ளார்.

பொள்ளாச்சி சுப்பேகவுண்டன் புதூரைச் சார்ந்த திருமதி லலிதாமணி இவரது மனைவி. திரிலோக் என்ற மகனும், காயத்திரி என்ற மகளும் உள்ளனர்.

சமூக நலனில் ஆர்வமிக்க இவர், பல சமூக சேவைகள் புரிந்து வருகின்றார். இவர் தொழில் துறையில் புரிந்துள்ள சாதனைகளுக்காகவும், சமூகப் பணிக்காகவும் இவருக்குப் பல விருதுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் சில பின்காணுமாறு : Shell Canada Retailer Excellence Award (From 2005 till now), Shell Canada Number one sales partner Canada Award (From 2011 till now), Schombery Community Award, Fund raising Excellence Award by Royal Bank of Canada for sick children hospital, Best Enterpreneur Award, No.1, in the Greater Toronto Area Best South Indian Restaurant Award by Rogers Canada.

‘‘தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்காற்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு’’

என்றார் வான்புகழ் வள்ளுவர். திரு.கோபால் இந்தக் குறள் கூறும் நெறியின்படி நின்று தன்னுடைய திறமையாலும், அரிய உழைப்பாலும், நிர்வாகத் திறனாலும், கனடா நாட்டில் ஈட்டிய செல்வத்தைக் கொண்டு தமிழ் மண்ணில் உள்ள நலிந்த உறவினர்களுக்கும், உதவி நாடிவரும் கொங்குச் சொந்தங்களுக்கும் முடிந்த உதவிகளைச் செய்வதோடு, பல்வேறு வகைகளிலும் சேவைகள் புரிந்து வருகிறார் கொங்கு மண்மீது மிகுந்த பற்றும் பாசமும் கொண்டுள்ளவர் இவர்.

திரைகடலோடித் திரவியம் தேடினாலும் இவரின் மூச்சுக் காற்றில் இரண்டறக் கலந்திருப்பது கொங்குச் சமுதாய மண்ணின் கலாச்சாரம். தம் இனத்தின் புகழ் மேலும் தழைத்து ஓங்குவதற்குத் தன்னால் இயன்றதை மிக்க ஆர்வத்துடன் செய்து வருகின்றவரும், தொழில் துறையில் வியத்தகு சாதனைகள் படைத்துள்ளவரும், சமூக சேவைகள் பலவற்றைச் செய்துவருபவரும், இத்தகைய சாதனைகளும் சேவைகளும் புரிந்தமைக்காக எண்ணற்ற உயரிய விருதுகள் பலவற்றைப் பெற்ற சிறப்புக்குரியவருமான திரு.கோபால் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘வெளிநாடு கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.



# வெளிநாடு கொங்கு சாதனையாளர்



## திரு. சசிகுமார் நல்லசாமி கவுண்டர்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் கொக்கராயன் பேட்டை கிராமத்தைச் சேர்ந்தவரும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினரும், ஸ்ரீ மாதேஸ்வரா அக்ரோ மில்ஸ் உரிமையாளருமான திரு. நல்லசாமி கவுண்டர் – திருமதி சரோஜா தம்பதியருக்கு 1984 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர், திரு. சசிகுமார் நல்லசாமி கவுண்டர், இவர் கண்ணன் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

கோவை இந்துஸ்தான் பொறியியல் கல்லூரியில் B.E., (Mech) படித்து முடித்தார். அகில இந்திய கணக்குத் திறமைத் தேர்வில் (All India Mathematics Talent Examination) முதல் இடம் பிடித்துச் சாதனை படைத்தார். பின்னர், சிங்கப்பூர் அரசுக்குச் சொந்தமான Nanyang Technological Unversity இல் மேற்படிப்பிற்கு விண்ணப்பித்தார். சிங்கப்பூர் அரசின் ‘Foreign Talent Scheme’ மூலமாக MS (Mech. Engg.) படிக்க இடம் கிடைத்தது. சிறப்பான முறையில் தேர்ச்சி பெற்றுப் பட்டம் பெற்றார்.

சிங்கப்பூர் அரசின் Permanent Resident in Singapore அழைப்பை ஏற்றுக்கொண்டு தற்போது சிங்கப்பூரில் வசித்து வருகிறார்.

சிங்கப்பூரில் உள்ள ஜெர்மன் பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவித் துறைத்தலைவர் பொறுப்பேற்றுச் சிறப்புடன் பணியாற்றி வருகிறார். சிங்கப்பூர் அரசு அங்கீகாரம் பெற்ற எரிபொருள் மேலாளராகவும் செயல்பட்டு வருகிறார். சிறந்த தொழில் முனைவோராகவும் உள்ளார்.

தமிழ்நாட்டிலிருந்து உயர் படிப்பிற்காகச் சிங்கப்பூர் சென்று அங்கேயே தங்கியிருந்தாலும், கொங்குச் சமுதாயம் மற்றும் கொங்குக் கலாச்சரத்தின் மேல் பெரும் ஈர்ப்புக் கொண்டுள்ளார் இவர். சிங்கப்பூரில் வசிக்கும் கொங்கு நண்பர்களுக்காகவும், சிங்கப்பூருக்குத் தமிழகத்திலிருந்து வரும் கொங்கு நண்பர்களுக்காகவும் பல வகையிலும் உதவி புரிந்து வருகிறார்.

சிங்கப்பூரில் திருவிழாக்கள் கொண்டாட ஏற்பாடுகள், கொங்கு நண்பர்கள் சந்திப்பிற்கான விழாக்கள், புதிதாகச் சிங்கப்பூர் வரும் கொங்கு நண்பர்களுக்குத் தங்குமிடம், வாகனம், உணவு போன்ற வசதிகளைச் செய்து தருதல், வேலை வாய்ப்பிற்கான உதவிகள், சுற்றுலாவிற்கான ஆலோசனைகள் ஆகியவற்றை மனமுவந்து செய்து வருகிறார். இவருடைய இன்சொல்லும், விருந்தோம்பலும், கைம்மாறு

எதிர்பாராத உதவிகள் செய்யும் பேருள்ளமும் கொங்குக் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் பிரதிபலிப்பதாக உள்ளன.

மத்திய கிழக்கு கொங்கு நண்பர்கள் அமைப்பை நிறுவியர்களுள் ஒருவர் இவர். சிங்கப்பூரிலும், இந்தியாவிலும் கொங்குக் கலாச்சாரத்தைப் பற்றிய விழிப்புணர்வினை ஊட்டிட 40க்கும் மேற்பட்ட கருத்தரங்குகளை நடத்தியுள்ளார். இந்தியப் பசுக்களை பற்றி 'திமி' என்ற நூலை எழுதியுள்ளார். கொங்கு பழக்க வழக்கங்கள், பண்பாடு, திருமணச் சடங்குகள், குலம், குலதெய்வம், குடிகோயில், கொங்கு வாழ்க்கை முறை போன்றவற்றைப் பற்றி 50க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இவருடைய மனைவி திருமதி கௌதமி, குடும்பத்தலைவி. ஏ.எஸ்.கார்வேந்தன் என்ற மகனும், எஸ்.தேவசேனா என்ற மகளும் உள்ளனர்.

திறமையான பொறியாளர், தொழில் வல்லுநர், எழுத்தாளர், தமிழ் ஆர்வலர், கொங்குச் சமுதாயக் காவலர்களுள் ஒருவர், சிங்கப்பூர் கொங்கு நண்பர்களின் ஒருங்கிணைப்பாளர் முதலான பன்முகம் கொண்டுள்ளதோடு, தொழில் துறையில் சாதனை படைத்துள்ள திரு. சசிகுமார் நல்லசாமி கவுண்டர் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'வெளிநாடு கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.



# வெளிநாடு கொங்கு சாதனையாளர்



## திரு. கே.வினோத்குமார்

கொங்கு மண்டலத்தின் மணிமகுடத்தில் மாணிக்கக் கல்லாய் ஒளிவீசிக் கொண்டிருக்கும் நாமக்கல் மாவட்டத்தில் பாரம்பரியம் மாறாமல் இயங்கும் அமுதா உணவகத்தின் உரிமையாளர்களான தெய்வத்திரு. குழந்தைவேல்கவுண்டர் மற்றும் திருமதி செல்லம்மாள் ஆகியோருக்குப் பேரனாகவும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி கணக்கு மேற்பார்வையாளராகப் பணியாற்றிய திரு. கந்தசாமி – திருமதி செல்வராணி தம்பதியருக்கு மகனாகவும் 1982 ஆம் ஆண்டு பிறந்தவர்தான் நமது கொங்கு மண்ணின் புகழை லண்டனில் நிலைநாட்டிக்கொண்டிருக்கும் கே.வினோத்குமார் அவர்கள்.

அவர் தனது பள்ளிப்படிப்பினை முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை பரமத்தி வேலூர் கந்தசாமி கண்டர் பள்ளியில் பயின்றார். 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை நாமக்கல் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் பயின்ற இவர், 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளை நாமக்கல் ஆண்கள் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் பயின்றார். 10ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்ற இவர், 1988 ஆம் ஆண்டு திருச்செங்கோடு KSR பாலிடெக்னிக் கல்லூரியில் DC-TECH பிரிவில் சேர்ந்து கல்லூரிப் படிப்பினைத் தொடங்கினார். இறுதி ஆண்டுத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுப் பட்டயம் பெற்றார். பிறகு 2001 ஆம் ஆண்டில் திருச்சியில் ஜெயராம் இன்ஜினியரிங் காலேஜ் & டெக்னாலஜியில் ECE பிரிவைத் தேர்ந்தெடுத்து அதிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று B.E., பட்டம் பெற்றார்.

விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பதற்கு ஏற்ப, திரு. வினோத்குமார் திருச்சியில் படிக்கும் காலத்திலேயே தனியாகப் பல்வேறு எலக்ட்ரிக் பணிகளைத் தன் நண்பர்களுடன் இணைந்து மேற்கொண்டார். பிறகு 2 மாத காலம், கோவையில் டாடா இண்டிகாம் தொலை தொடர்பு நிறுவனத்தில் பணிபுரிந்தார்.

பின்னர் கல்வி மீது கொண்ட தீராத தாகத்தையும், திறமையையும் உணர்ந்த இவரது தந்தை இவரை மேற்படிப்பிற்காக லண்டன் அனுப்பினார். அங்கு எம்.எஸ். (கம்ப்யூட்டர் நெட்வொர்க்) என்ற பிரிவைத் தேர்ந்தெடுத்த இவர், அந்தத் துறையிலும் சிறப்பாகப் பயின்று பட்டம் பெற்றார். இவரது படிப்பிற்கான செலவை இவரே பகுதி நேர வேலையாக பெட்ரோல் பங்க், பீசா டெலிவரி, கூரியர் போன்ற பணிகளை மேற்கொண்டு கல்விக் கட்டணத்தைக் கட்டினார்.

படிப்பிற்குப் பிறகு லண்டனிலேயே Rock Uk Private Limited என்ற நிறுவனத்தில் விற்பனை ஆலோசகராய்ப் பணியாற்றினார். 2009 ஆம் ஆண்டு ஆண்டிப்பட்டிபுதூர் திரு.முத்துச்சாமி கவுண்டர் – மீனாட்சி அவர்களின் புதல்வியும், பொறியியல் பட்டதாரியுமான செல்வி சத்யா அவர்களை இல்லறத் துணைவியாக ஏற்றுக்கொண்டார்.

பணிபுரிந்த நிறுவனத்தில் மேலாளராகப் பதவி உயர்வு கிடைத்தபோதும், அதை ஏற்காமல் தனது நண்பர்கள் உதவியுடன் Reliance Local என்ற பல்பொருள் அங்காடி நிறுவனத்தை லண்டனில் தொடங்கினார். திருமதி சத்யா வினோத்குமார் அவர்களும் IT Programmer and Developer ஆக லண்டனிலேயே பணியாற்றுகிறார். இத்தம்பதியருக்கு மஹித் என்ற ஆண் குழந்தை உள்ளது.

கொங்குச் சமுதாயத்தின்மேல் கொண்ட ஆழ்ந்த பற்றுக் காரணமாகவும், சமுதாய முன்னேற்றத்திற்குத் தன்னாலியன்ற சேவைகளைச் செய்திட வேண்டும் என்ற ஆவலினாலும், அமெரிக்க கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவரான திரு.செல்வம் அவர்களது முயற்சியாலும், தனது நண்பர்களின் கடின உழைப்பாலும், லண்டன் மாநகரில் லண்டன் கொங்கு நண்பர்கள் சங்கத்தினை உருவாக்கினார். இவரது முயற்சியால் லண்டனில் 01.05.2016 தேதியன்று நம்மை அடிமைப்படுத்திய வெள்ளையர்களது மண்ணிலேயே, அனைவரும் வியக்கும் வண்ணம் நமது கொங்கு நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் கொங்குக் குடும்ப விழாவை மிகச் சிறப்பாக நடத்தினார். ஆதரவின்றி தவிக்கும் நம் கொங்குச் சமுதாயத்தைச் சார்ந்த திறமையான நபர்கள் எங்கு இருந்தாலும், அவர்களை அடையாளம் கண்டு அவர்களது திறமையை வெளிக்கொண்டு வரத் தேவையான உதவிகளைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

லண்டனில் இருந்தபடியே நாமக்கல்லில் இருக்கும் தனது கொங்கு நண்பர்களுடன் இணைந்து இவர் கொங்குச் சமுதாயத்திற்காகச் செய்து வரும் பணிகளைப் பாராட்டி, இலண்டன் நகரில் கொங்கு நண்பர்களை இணைத்துக் கொங்கினத்திற்குப் பெருமை சேர்த்து வருகின்ற திரு. வினோத்குமார் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘வெளிநாடு கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.



# கொங்கு பெண் சாதனையாளர்



## திருமதி ஆதிலட்சுமி லோகமூர்த்தி

நமது சங்கத்தின் முன்னாள் பொருளாளர், பொள்ளாச்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் திருமிகு. கே.சௌந்தர்ராஜ்அவர்களின் மூத்த புதல்வியும், நமது சங்க உறுப்பினர் டாக்டர் ஆர்.லோகமூர்த்தி அவர்களின் மனைவியுமான திருமதி ஆதிலட்சுமி அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராய்ப் பணியாற்றி வருகிறார்.

சென்னை சட்டக்கல்லூரில் B.L., சட்டப்படிப்பு முடித்தவுடன் மேற்படிப்பாக P.G.Diploma in Personnel Management and Industrial Relations முடித்துள்ளார். வழக்கறிஞராக அனைத்து வழக்குகளையும் கையாண்டாலும் குடும்ப நல வழக்குகள், தொழிலாளர் நல வழக்குகள், சொத்துரிமை வழக்குகள் அதிலும் குறிப்பாக, பெண்கள், குழந்தைகள், திருநங்கைகள், நலிவடைந்த மக்களுக்காக நீதிமன்றத்தில் வழக்காடி வருகிறார். மேலும் பல நிறுவனங்களுக்கு மனித வள மேம்பாட்டு ஆலோசகராகவும் Domestic Enquiry Officer ஆகவும் செயலாற்றி வருகிறார்.

கல்வி நிலையங்கள், தனியார், பொது மற்றும் அரசு நிறுவனங்கள், சுய உதவிக்குழு மகளிர், பணி செய்யும் மகளிர், ஆண் தொழிலாளர்கள் போன்ற அனைவருக்கும் தொடர்ந்து சுயமுன்னேற்றம் / தனிமனித வளர்ச்சி, விழிப்புணர்வு போன்ற பல பயிற்சிகளைக் கொடுத்து வருகிறார்.

சென்னை உயர்நீதி மன்ற பெண் வழக்கறிஞர் சங்கத் துணைத்தலைவர், தமிழ்நாடு இலவச சட்ட உதவி ஆணைக்குழு Panel வழக்கறிஞர், NIPM வாழ்நாள் உறுப்பினர் மற்றும் சென்னைப் பகுதி துணைச்செயலாளர், MLA கௌரவச் செயலாளர், Sriraksha அமைப்பின் நிறுவனர், மயிலை திருவள்ளுவர் சங்கச் செயற்குழு உறுப்பினர், SRC மற்றும் Receivers Panel உறுப்பினர் முதலான பதவிகளும் பொறுப்புகளும் ஏற்றுச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். பல நிறுவனங்களில் உருவாக்கப்பட்டுள்ள குறைகள் தீர்ப்புக் குழவின் உறுப்பினராய்ப் பணியாற்றி வருகிறார்.

இவர் ஒரு சிறந்த எழுத்தாரளாகவும் உள்ளார். “A Compilation of Important Labour Laws and Disciplinary Proceedings” என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார்.பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சட்ட நுணுக்கங்களை எளிய நடையில் உள்ளடக்கிய ‘‘சட்டம் உன் கையில்’’ என்ற

நூலை எழுதியுள்ளார். அந்தப் புத்தகத்தின் கட்டுரைகள் நமது சங்கத்தின் சென்னை கொங்கு நண்பர்கள் மலரில் தொடர் கட்டுரையாக வெளியிடப்பட்டு வருகின்றன. அவை நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

பல்வேறு மாநில மற்றும் தேசிய கருத்தரங்கங்களில் பெண்கள், குழந்தைகள், திருநங்கைகள் ஆகியோரின் சட்ட உரிமைக்காகவும், சமூக உரிமைக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்துக்கொண்டிருப்பவர் இவர்.

பல்வேறு வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் வாயிலாகப் பெண்கள், குழந்தைகள், திருநங்கைகள் மற்றும் சமூகம் சார்ந்த கருத்துகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். சட்டம் மற்றும் சமூகம் சார்ந்த கருத்துகளையும், பெண்கள் மற்றும் குழந்தைளுக்கான சட்டக்கருத்துகளையும் பல்வேறு பத்திரிக்கைகளில் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். 2015 ஆம் ஆண்டிற்கான சிறந்த பெண் சாதனையாளர் விருதை, பெண்களுக்கு அவர் ஆற்றி வரும் சட்டம் மற்றும் சமூக பணிக்காக Indo-Russain Women Association அவருக்குக் கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளது.

2015–2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த பெண் சாதனையாளர் விருதினை சர்வதேச ரோட்டரி அமைப்பின் சென்னை அங்கம் கொடுத்துக் கௌரவப்படுத்தியுள்ளது. மேலும், திருநங்கைகள் சமூகத்திற்காக அவர் ஆற்றி வரும் சேவையைப் பாராட்டி சகோதரன் முதற்கொண்ட அனைத்து திருநங்கைகளுக்கான அமைப்பு அவருக்கு சமீபத்தில் விருது வழங்கி கௌரவப்படுத்தியுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சட்டப் பாதுகாப்புக் குறித்து விழிப்புணர்வு ஊட்டும் வகையில் நூல்களையும், பல கட்டுரைகளையும் எழுதியுள்ளதோடு, சட்ட ரீதியாக அவர்களுக்கான உரிமைகளைப் பெற்றிடப் பாடுபட்டு வருபவரும், பல பெருமைமிகு பொறுப்புகளையேற்று, சிறப்பான வகையில் பணியாற்றி, உயரிய விருதுகள் பல பெற்றுச் கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ளவரும், திருநங்கைகளின் முன்னேற்றத்தினைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கான சட்டப் பாதுகாப்புகளைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டிவருபவரும், சமூக சேவைகள் செய்வதில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளவருமான வழக்கறிஞர் திருமதி ஆதிலட்சுமி லோகமூர்த்தி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு பெண் சாதயைாளர்’ விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.



# கொங்கு பெண் சாதனையாளர்



## செல்வி ம.நவினா

நாமக்கல் மாவட்டம், பட்டணம் கிராமத்தைச் சேர்ந்தவரும், சென்னை அரும்பாக்கத்தில் வசிக்கும் நமது சங்கத்தின் உறுப்பினருமான மொளசி கண்ணன் கூட்டம் திரு. எஸ்.மனோகரன் – திருமதி செந்தமிழ்ச்செல்வி தம்பதியரின் ஒரே மகள் 24 வயது நிரம்பிய செல்வி எம்.நவீனா ஆவார். இவருடைய தாய்வழித் தாத்தா மெட்டாலா அத்தியப்ப கவுண்டர் அவர்கள் ஆவார்.

செல்வி ம.நவினா, தனது இளமைப் பருவத்தில் இருந்தே கல்வியில் சிறந்து விளங்கினார். 6ஆம் வகுப்பு வரை சென்னை அண்ணா ஆதர்ஸ் பள்ளியிலும், பின்பு திருச்செங்கோடு வித்யா விகாஸ் பள்ளியிலும் பயின்றார். தனது 10 ஆவது வகுப்பு மெட்ரிக் தேர்வில் பள்ளியில் முதலிடம் பெற்றார். மாவட்ட அளவில் மூன்றாவது இடத்தில் தேர்ச்சி பெற்று பள்ளிக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்ந்தார். பின்பு +2 தேர்வில் 1171 மதிப்பெண்கள் பெற்றார்.

பின்னர் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள வெங்கடேஸ்வரா கல்லூரியில் சேர்ந்து B.E., (EEE) பட்டம் பெற்றார். பிரபல பல தனியார் நிறுவனங்கள் வேலைக்கு அமர்த்த நடத்திய கல்லூரி வளாகத் தேர்வில் வெற்றி பெற்றார். ஆனால் அவை எதிலும் அவர் சேரவில்லை.

மக்களுக்குச் சேவையாற்றுவதைக் கருத்தில் கொண்டு தான் அரசுப்பணியில் சேர வேண்டும் என்ற நோக்கத்தில் IAS தேர்வுக்கான பயிற்சியைப் பெற்றிட முடிவு செய்தார். சென்னை அண்ணா நகரில் உள்ள, கொங்கு சாதனையாளர் விருது பெற்ற திரு. சங்கர் அவர்கள் சிறப்பாக நடத்திவருகின்ற, 'சங்கர் IAS அகாடமி'யில் சேர்ந்து பயிற்சி பெற்றார். அப்போது நடைபெற்ற Institute of Banking and Personnel Service (IBPS) நடத்திய தேர்வில், Indian Bank இல் Probationary Officer பதவிக்குத் தேர்ச்சி பெற்றார். இருப்பினும் அதிலும் இவர் சேரவில்லை.

பின்னர் 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற மத்திய உள்துறை அமைச்சகத் தேர்வில் வெற்றி பெற்று உதவி மத்திய உளவுத்துறை அதிகாரியாகப் பணியில் சேர்ந்துள்ளார். தற்போது அவர் புதுடெல்லியில் பயிற்சி பெற்று வருகிறார்.

கொங்குச் சமுதாயப் பெண்கள் அறிவிலும், ஆற்றலிலும் சிறந்த விளங்குகிறார்கள். தொழிற்படிப்பு B.E., B.VSC., B.Sc., (Agri), B.Tech., பட்டம் பெற்றவுடன் வேலைகளுக்காக நடத்தப்பெருகின்ற கல்லூரி வளாகத் தேர்வுகளில் பங்கு பெற்று, மென்பொருள் நிறுவனங்களில் சேர்ந்துவிடுகிறார்கள். நமது சமுதாயம் முன்னேற, தாங்களும் முன்னேற கொங்குச் சமுதாயத்தின் திறமைமிகு பெண்கள் மத்திய அரசின் குடிமைப் பணிகள் தேர்வுகள் எழுதவேண்டும் என நமது சங்கம் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறது. அதற்கேற்பத் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் கொண்டு, திட்டமிட்டு உழைத்தால் வெற்றி நிச்சயம் என்பதற்கு உதராணமாகத் திகழ்பவர் செல்வி. ம.நவினா

2015 ஆம் ஆண்டு மத்திய உள்துறை அமைச்சகம் அகில இந்திய அளவில் நடத்திய தேர்வில் சிறப்பிடம் பெற்று, மத்திய உளவுத்துறை உதவி அலுவலராய்ப் பணியில் சேர்ந்துள்ளவரும், சாதிக்கத் துடிக்கும் கொங்குச் சமுதாயப் பெண்களுக்கு முன்னுதாரணமாய்த் திகழ்பவரும், கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை தேடித் தந்துள்ளவருமான செல்வி ம.நவினா அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு பெண் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.



# கொங்கு வேளாண் சாதனையாளர்



## முனைவர் சி.கதிரேசன்

நாமக்கல் மாவட்டம், முத்துகாப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. (அமரர்) பெ.சின்னுசாமி – திருமதி செ.நல்லம்மாள் தம்பதியரின் மகனாக 1975 ஆம் ஆண்டு பிறந்தவர், முனைவர் சி.கதிரேசன். விளையன் குலத்தைச் சேர்ந்தவர்.

முத்துகாப்பட்டி, பழையபாளையம், அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் நாமக்கல் தெற்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் பள்ளிப்படிப்பை முடித்தார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் B.Sc., (Agri) பட்டம் பெற்றார். பின்னர் பெங்களூரு வேளாண் பல்கலைக்கழகத்தில் M.Sc., (Agri) பட்டம் பெற்ற பின்பு, Ph.D., (Agri) பட்டத்தை 2002 ஆம் ஆண்டு அதே கல்லூரியில் பெற்றார்.

2002 முதல் 2006 வரை உடுமலைப்பேட்டை, ஜெயின் இரிகேஷன் தோட்டக்கலைப் பண்ணை மற்றும் பெங்களூரு கோபாலன் ஆர்கானிக்ஸ் ஆகியவற்றில் முதன்மை நிர்வாகியாகப் பணியாற்றினார், பின்னர் 2016 முதல் இன்று வரை மத்தியத் தொலைதொடர்பு மற்றும் மத்திய தகவல் தொழில் நுட்ப அமைச்சகத்தின் கீழ் ஐதராபாத்தில் செயல்பட்டுவரும் உன்னத கணிப்பியல் வளர்ச்சி (சி டாக்) – இல் முதன்மை தொழில்நுட்ப அலுவலர் மற்றும் திட்ட மேலாளராய்ப் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். தேசிய / மாநில வேளாண் துறையில் பல ஆராய்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார், செயல்படுத்தி வருகிறார்.

இவருடைய சிறப்பான பணிகளைப் பாராட்டியும், சாதனைகளை அங்கீகரித்தும் WSIS Prize 2016 from United Nations Organiastion, Skoch Smart Technology Award 2015, eIndia 2012 (for Mother project) e-North east Award 2011 ஆகிய உயரிய விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஓர் அங்கமான ITC இந்த ஆண்டு வழங்கிய உயரிய மற்றும் மிகவும் மதிப்பு வாய்ந்த 'WSIS Prize 2016' என்ற விருதை வழங்கி உள்ளது. இந்த விருதை 03/05/2016

அன்று சுவிர்சர்லேண்டு நாட்டின் ஜெனிவா நகரில் Information Society Forum 2016 என்ற தலைப்பில் நடைபெற்ற உலக உச்சி மாநாட்டில் இவர் நேரில் பெற்றுக்கொண்டார். விருதுக்கான தேர்வுக்கு அனுப்பப்பட்ட 311 திட்டங்களில், இவரது Harita Priya Project முதல் இடத்தைப் பெற்றது என்பது மகத்தான சாதனையாகும்.

நாட்டில் எழுபது சதவித மக்கள் விவசாயத்தையே தொழிலாகச் கொண்டுள்ளனர். இருப்பினும் பெரும்பாலான விவசாயிகள் கல்வியிலும், பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கியுள்ளனர். நம் நாட்டில் விவசாயம் செய்வதற்காகவும், குடும்பத்தைத் தன்மானத்துடனும் நடத்துவதற்காகவும் கடன் வாங்கிய சில விவசாயிகள், அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமல் தற்கொலை செய்து கொள்கின்றனர் என்ற செய்தி கல்மனம் கொண்டோரையும் நெகிழவைப்பதாய் உள்ளது. அல்லும் பகலும் நெற்றி வேர்வை நிலத்தில் விழ, அயராது பாடுபட்டுவருகின்ற விவசாயிக்கு, மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் உணவுப்பொருட்களை விளைவிக்கின்ற விவசாயிகளுக்குப் போதிய வருமானமில்லை.

இத்தகைய சூழ்நிலையில், விவசாயப் படிப்பில் உயர்கல்வி கற்று, மத்தியிலும் மாநிலத்திலும் விவசாயத்தில் நல்ல திட்டங்களை ஆராய்ந்து செயல்படுத்திவருகின்ற டாக்டர் சி.கதிரேசன் பெரிதும் பாராட்டுக்குரியவர். இவரைப் போன்ற நிபுணர்களால் தான் விவசாயிகளின் வாழ்வில் ஒளி பிறக்கும் என நம்பலாம்.

இவருடைய மனைவி பெயர் திருமதி தேவிகா. இல்லத்தரசி. இத்தம்பதியருக்கு ஹரிபாஸ்கரன் என்ற மகனும், லேகா என்ற மகளும் உள்ளனர். இருவரும் பள்ளியில் படித்து வருகின்றனர்.

வேளாண் துறையில் சாதனைகள் பல புரிந்துள்ள முனைவர் கதிரேசன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு வேளாண் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.



# கொங்கு வேளாண் சாதனையாளர்



## திரு. வழுக்குப்பாறை பாலு (எ) பாலசுப்பிரமணியம்

கோயமுத்தூர் மாவட்டம் வழுக்குப்பாறை கிராமத்தில் 1946 ஆம் ஆண்டு திரு.துரைசாமி கவுண்டர் – திருமதி நஞ்சம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர், திரு. பாலசுப்பிரமணியம். பள்ளிப் படிப்பு முடித்ததும் முழு நேர விவசாயத்தில் ஈடுபட்டார்.

சிறு வயது முதல் பொதுச் சேவையில் ஈடுபாடு கொண்டிருந்த திரு. பாலு 1970 ஆம் ஆண்டு முதல் விவசாயச் சங்கத்தில் சேர்ந்து தொடர்ந்து சேவை செய்து வருகிறார். தற்சமயம் கோவை மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவராகப் பொறுப்பேற்றுப் பணிபுரிந்து வருகிறார். விவசாயிகள் நலன்களுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் தொடர்ந்து போராடிக்கொண்டு வருகிறார்.

இவர் பங்கு கொண்ட விவசாயப் போராட்டங்கள் மிகப் பல. 15 முறை விவசாயப் பேராட்டங்களுக்காகச் சிறைத் தண்டனை அனுபவித்துள்ளார். அதிகபட்ச தண்டனையாக 53 நாட்கள் சிறையில் இருந்தார்.

கொங்குப் பகுதிகளான அன்னூர், மேட்டுப்பாளையம், அவிநாசி மற்றும் பெருந்துறை மிக வறட்சியானவை. இப்பகுதிகளின் வறட்சியைப் போக்கிட, அத்திக்கடவுத் திட்டத்தை நிறைவேற்ற உண்ணாவிரதம் இருந்தார். இவரையும் சங்கத்தினரையும் சிறையில் அடைத்தனர். சிறையிலும் 6 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தனர், பாலுவின் குழுவினர். கடைசியில் அரசு இவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி ஒன்பதாம் நாள் விடுதலை செய்தது. அத்திக்கடவு திட்டம் நிறைவேற்றப்பட்டது.

கோவை புறவழிச்சாலையின் இருபுறமும் 5 கிராமங்களின் 7000 ஏக்கர் நிலத்தைச் சிறுதொழில் வளர்ச்சி கார்பொரேஷன், SIPCOT, கையகப்படுத்த முயன்றது. இதை எதிர்த்து விவசாய சங்கத்தின் மூலம் ஆயிரக்கணக்கான விவசாயிகளைத் திரட்டிப் போராட்டம், நடத்தினார். பின்னர், திரு. கோவை செழியன் அவர்களின் உதவியுடன் பெரு முயற்சி செய்து இத்திட்டத்தைக் கைவிடச்செய்தார்.

2000 ஆம் ஆண்டில் உருவான ‘‘சிறுதுளி’’ இயக்கத்தில் களப் பணியாளராக இவர் செய்த அரும்பணிகள் மிகவும் பாராட்டத்தக்கவை. நொய்யல் நதியின் வெள்ள நீர், கோவை குறிச்சி குளம் உட்பட 28 குளங்களை நிரப்பப் பல்வேறு கால்வாய்கள் இருந்தன. காலப் போக்கில் இந்த வாய்க்கால்கள் பல தடைகளாலும் ஆக்கிரமிப்புகளாலும் காணாமல் போய்விட்டன. உயிருக்கு அஞ்சாமல் ஒவ்வொரு வாய்க்கால் தடத்தையும் பழைய சர்வே படங்களின் உதவியுடன் நேரில் சென்று கண்டுபிடித்தார். அந்தக் கால்வாய்களில் இருந்த எல்லாத் தடைகளையும் ஆக்கிரமிப்புகளையும் அகற்றினார். இன்று நொய்யல் வெள்ள நீர் 28 குளங்களையும் நிரப்புகிறது. நிலத்தடி நீர் பெருமளவு உயர்ந்துள்ளது. இவருடைய இந்தச் சாதனை அனைவராலும் போற்றிப் பாராட்டப்பட்டது.

தற்போது ‘‘சிறு துளி’’ அமைப்பின் தலைமைக் குழு உறுப்பினராக உள்ளார். சிறு துளி அமைப்புடன் இணைந்து நொய்யல் நதியில் கிராமக்கழிவு நீர், சாயப்பட்டறைக் கழிவு நீர் போன்ற மாசுகள் கலக்காமல் தடுத்து வருகிறார். மழைக்காலங்களில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் குழுக்கள் மூலம் 28 குளங்களையும் நிரப்புவதும் இவர் பணிகளுள் ஒன்றாக உள்ளது.

தென்னை மரங்களிலிருந்து, கள் இறக்கும் போராட்டத்துக்கு விவசாயிகளின் ஆதரவைத் திரட்டி வருகிறார். ‘‘கள் போதைப் பொருளல்ல; உடல் நலத்திற்கு நல்லது. விவசாயிகள் வாழ்வில் ஒளியேற்றும் வல்லமை கொண்டது’’ என்பன போன்ற விழிப்புணர்வையூட்டி வருகின்றார். பல ஏழை மாணவர்களின் மேல் படிப்புக்கு உதவி செய்து வருகிறார், மனிதநேயம் கொண்ட இவர்.

ஒற்றைக்கால் மண்டபம் ‘‘புற்றிடம் கொண்டீஸ்வரர் சிவன்’’ கோயிலுக்கு உரிமையான 30 ஏக்கர் நிலத்தைத் திரும்பப் பெற்றுத் தர நீதி மன்றம் மூலம் போராடி வென்றார். தோட்டக்கலை மற்றும் இயற்கை விவசாயத்தில் சாதனைகள் படைத்து வருகிறார். இவர் தோட்டத்தில் தேங்காய்களையும், தக்காளிப் பழங்களையும் பார்ப்பவர்கள் வியந்து போவார்கள்.


இவரது மனைவி வசந்தா புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மறைந்தபோது ஒரே மகன் விக்னேஷ் வயது இரண்டு. தற்போது மகன் டாக்டர் விக்னேஷ், புற்றுநோய் மருத்துவத்தில் நிபுணத்துவம் பெற்று, கோவையில் பணியாற்றி வருகிறார். விக்னேஷின் துணைவி டாக்டர் சுமித் அவர்களும் சிறப்பு மருத்துவர், விக்னேஷ் மாமனார் டாக்டர் மயில்சாமி, மாமியார் டாக்டர் சந்திரா இருவரும் கோவையில் புகழ்பெற்ற மருத்துவர்களாய்ப் பணியாற்றி வருகின்றர். கெயில் குழாய் பதிக்கும் திட்டம் கேரள எல்லையைத் தாண்டிக் கோவை மாவட்டத்தில் இறங்காமல் இருக்க விவசாயிகளின் ஆதரவுடன் போராடி வருகிறார், திரு.பாலு. டெல்லியில் நடைபெற்ற போராட்டத்திலும் கலந்து கொண்டார். கிராமத்தில் பொதுமக்கள் மற்றும் மாணவமணிகள் பயன்படுத்துவதற்காக ஒரு படிப்பகம் நிறுவியுள்ளார்.

கொங்குச் சமுதாயத்திற்காக எந்தவிதமான பிரதிபலனும் எதிர்பாராமல் திரு. பாலு அவர்கள் செய்துள்ள, செய்து வரும் சேவைகள் போற்றுதலுக்கு உரியன.

வேளாண்துறையில் சாதனைகள் படைத்து வருவதோடு, விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக அஞ்சா நெஞ்சத்தோடு தொடர்ந்து பாடுபட்டுவரும் திரு.வழுக்குப்பாறை திரு.பாலு (எ) பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு வேளாண் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.



# கொங்கு வேளாண் சாதனையாளர்



## திரு. ஆர்.நடராஜன்


ஈரோடு மாவட்டம், வெள்ளோடு கிராமத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயி திரு.ஆர்.நடராஜன். தனது தோட்டத்தில் 1 ஏக்கர் 30 சென்ட்டில் கரும்பு பயிரிட்டு 130 டன் கரும்பு விளைச்சலை எடுத்துள்ளார் ஒரு சென்ட் நிலத்தில் ஒரு டன் கரும்பு என்பது இதுவரை மாநில அளவில் மட்டுமின்றி அகில இந்திய அளவிலும் ஒரு மாபெரும் சாதனையாகும்.

சக்தி சர்க்கரை ஆலை நிறுவனத்துடன் இணைந்து கோ 86032 ரக கரும்பினைத் திசு வளர்ப்பு முறையில் தயாரிக்கப்பட்ட நாற்றுகளை உபயோகப்படுத்தி, இயற்கை உரம் மற்றும் நவீன விவசாய உத்திகளைக் கடைப்பிடித்துச் செயற்கரிய இச்சாதனையைப் புரிந்துள்ளார். பல ஆண்டுக் காலமாக இயற்கை விவசாயம். சொட்டு நீர்ப்பாசன முறை, நீர்த் தெளிப்புமுறை, இயற்கைப் பூச்சி விரட்டி ஆகியவற்றைப் பின்பற்றி முன்னோடி விவசாயியாகத் திகழ்ந்து வருகிறார்.இவரது இந்தச் சாதனையைச் சக்தி சர்க்கரை ஆலை குழுமம் பெரிதும் பாராட்டிப் பரிசு வழங்கியுள்ளது. 2016, ஜீன் 28ஆம் தேதி இந்து ஆங்கில நாளிதழில் இவரது சாதனையைப் பாராட்டிக் கட்டுரை வெளிவந்துள்ளது.

பி.ஏ., பட்டதாரியான திரு.ஆர்.நடராஜன் அவர்கள் கொங்கு பயிரன் குலத்தைச் சார்ந்தவர். அவரது துணைவியார் திருமதி பானுமதி அவர்களும் விவசாயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர்களது இரு மகன்களில் மூத்தவர் திரு. என்.சிலம்பரசு எம்பிஏ முடித்துவிட்டு, தனது தந்தையாருக்கு உறுதுணையாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார். இளையவர் திரு. என்.கிருபாகரன், B.E., (Civil) பட்டம் பெற்று தற்போது வளைகுடா நாட்டில் பொறியாளராகப் பணியாற்றி வருகிறார்.

வேளாண்துறையில் வியத்தகு சாதனை புரிந்து கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள திரு.ஆர்.நடராஜன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு வேளாண் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## திரு. ஜே.ஆர்.தன்ராஜ்

நாமக்கல் மாவட்டம், பேளுக்குறிச்சி அருகில் உள்ள கல்குரிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு.ரங்கசாமி கவுண்டர் அவர்களின் மகனாகப் பிறந்தவர், 69வயது நிறைந்த திரு.ஜே.ஆர்.தன்ராஜ். 10 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரரான இவர் பள்ளிப்படிப்பை முடித்தவுடன் தீவிர விவசாயத்தில் ஈடுபட்டார். 35 ஆண்டுகள் விவசாயத்தில் தேங்காய், கரும்பு ஆகியவற்றின் விளைச்சலில் சாதனை படைத்துள்ளதோடு, எண்ணெய் செக்காட்டுதல், இயந்திரத்தில் மாவு அரைத்தல் போன்ற தொழில்களையும் செய்து வருகிறார்.

இவருக்கு மனைவி, ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். மகளுக்குத் திருமணமாகிவிட்டது. விவசாயத்தில் கடின உழைப்பைக் குறைக்கவும், வேலை ஆட்களைக் குறைத்திடவும், வேலைக்கு ஆள் கிடைக்காத பிரச்சினையைச் சமாளித்திடவும், விவசாயத்தில் லாபம் ஈட்டிடவும் இவர் பல கருவிகளை உருவாக்கியுள்ளார். சூர்யகாந்தி கதிர் அடிக்கும் இயந்திரம், மேட்டுப்பாத்தி அமைக்கும் கருவி ஆகியவை இவரால் உருவாக்கப்பட்டவை.

மரவல்லி அறுவடை கருவி, கிழங்குப் பட்டை உறிக்கும் இயந்திரம், எளிய முறை கிழங்கு பாயிண்ட் ஸ்கேல் போன்றவற்றை விவசாயிகள் பயன்பாட்டிற்கு இலவசமாக வழங்கி வருகிறார். மரவள்ளிக்கிழக்கு நறுக்கும் இயந்திரம், மரவள்ளி மதிப்புக்கூட்டுப் பொருள் ஆகியவற்றில், சிப்ஸ், மாவு போன்றவை குறைந்த செலவில் குறைந்த உழைப்புடன் தயாரிக்க முடிகிறது. Agri Intex 2003, Sristi Saman Award at IIM, Ahemedabad - இவர் பெற்ற விருதுகள். NIF சான்றுகளை டெல்லியில் நடந்த விழாவில் பெற்றுள்ளார்.

சிறந்த விவசாயியாக விளங்கி வருவதோடு, சீரிய விவசாயத்திற்குத் தேவையான கருவிகளை உருவாக்கி, விவசாயத்தை இலாபகரமான தொழிலாக மாற்றிடும் வகையில் சாதனை படைத்துள்ள திரு.தன்ராஜ்அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு வேளாண் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வி எஸ்.கே.கோகுலவாணி

சேலம், வெள்ளக்கல்பட்டியைச் சேர்ந்த திரு. ஆர்.எஸ்.கலைச்செல்வன் – தெய்வத்திருமதி சரஸ்வதி தம்பதியரின் மகளாக 1999 ஆம் ஆண்டு பிறந்தவர் செல்வி எஸ்.கே.கோகுலவாணி. இவருடைய தம்பி எஸ்.கே.சிவகுமார்.

செல்வி கோகுலவாணி 5ஆம் வகுப்பு வரை சேலம் கோல்டன் ஸ்பார்க் பள்ளியிலும், 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை கொங்கு வேளாளர் அறக்கட்டளை நடத்தும் சேலம் கொங்கு மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியிலும் படித்து முடித்துள்ளார். 12 ஆம் வகுப்புத் தேர்வில் 1162 மதிப்பெண்கள் பெற்று, பள்ளியில் இரண்டாம் இடம் பெற்றார். தற்போது பெருந்துறை கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.காம் பட்டப்படிப்பில் சேர்ந்துள்ளார்.

படிப்பில் சிறந்த விளங்குவதோடு, விளையாட்டுத் துறையில் வியத்தகு சாதனைகள் பல புரிந்துள்ளார். பள்ளிக் கல்வித்துறை சார்பில் மண்டல அளவில் 2015–2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு 4x100 ஓட்டம், கோ–கோ, செஸ், ரிலே, நீளத்தாண்டுதல், டிஸ்கஸ் எறிதல், 100 மீட்டர்கள் ஓட்டம் ஆகிய அனைத்திலும் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். மண்டல அளவில் 2015–2016 ஆண்டுப் போட்டிகளில் Individual Championship பட்டம், 2012 ஆம் ஆண்டு 9th அகில இந்திய கராத்தே போட்டியில் முதலிடம், 2010 ஆம் ஆண்டு 11th அகில இந்திய குங்ஃபூ கராத்தே போட்டியில் முதல் இடமும் Black Belt ம் பெற்றுச் சாதனை மேல் சாதனை படைத்துள்ளார். தான் பெற்றுள்ள வெற்றிகளைப் பார்த்து மகிழ, அம்மா இப்பூலகில் இல்லையே என்ற வருத்தமும் ஏக்கமும், கோகுலவாணிக்கு மட்டுமின்றி நமக்கும் ஏற்படுகிறது.

இவரது சாதனைகளைப் பாராட்டி இளம் வளர்மணி விருது, அறிவுக்களஞ்சியம் விருது, சிறந்த சாதனை வீரர் விருது முதலான விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

படிப்பிலும், விளையாட்டிலும் சாதனைகள் படைத்துள்ள கொங்குக்குலச்செல்வி கோகுலவாணி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் கே.பி.ஸ்ரீராம்

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நன்னியூர் புதூரில் வசிக்கும் நமது சங்க உறுப்பினர் திரு. கே.பழனிசாமி – திருமதி நிர்மலா தம்பதியரின் 12வயது மகன் செல்வன் கே.பி.ஸ்ரீராம். கரூர் கொங்கு வெள்ளாளர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 7 ஆம் வகுப்புப் படித்து வருகிறார்.

கே.பி.ஸ்ரீராம் தனது பதினோறாவது வயதிலேயே மத்திய அரசின் Dakshina Bharat Hindi Prachar Sabha ஹிந்தி தேர்வில் B.A., பட்டம் பெற்றுப் பெரும் சாதனை நிகழ்ச்சியுள்ளார். பள்ளியில் படிப்பிலும், விளையாட்டிலும், அறிவிலும் ஆசிரியர்கள் உட்பட அனைவரும் வியந்து பாராட்டும் வண்ணம் மிகுந்த ஆற்றல் கொண்டு விளங்குகிறார்.

அவர் இரண்டாம் வகுப்புப் படிக்கும்போதே ஹிந்தி கற்றுக்கொள்ள ஆரம்பித்து, தற்போது B.A., பட்டம் (A pass in Rashtrabasha Praveen Poorvardha equivalent to B.A., degree Examination) பெற்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார். மேலும் அவர் LKG முதல் 6ஆம் வகுப்பு வரை வகுப்பில் தொடர்ந்து முதலிடம் பெற்று வருகின்றார். அவர் படிப்பில் மட்டும் அல்லாமல் பேச்சுப் போட்டி, ஓவியம், செஸ் போன்ற இதர போட்டிகளிலும் கலந்துகொண்டு நிறையப் பரிசுகளைப் பெற்றுள்ளார்.

12 வயதில் வியத்தகு சாதனைகள் படைத்து, பெற்றோர்க்கும், பள்ளிக்கும், கொங்குச் சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்துள்ள செல்வன் ஸ்ரீராம் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.



# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

03.07.2016 அன்று நடைபெற்ற 2016 ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 1 | Running Race | I S.சர்வேஷ் |
| | LKG & UKG (Boys) 50 Metres | II V.ஹரிசங்கர் |
| | | III M.ரித்திக் |
| 2 | Running Race | I S.தரனீஷ் |
| | I & II Std. (Boys) 50 Metres | II V.தக்ஷன் |
| | | III A.ஹரிஷ் |
| 3 | Running Race | I M.U.தேவேஷ் |
| | 50 Metres (Boys) | II D.பவீஷ் |
| | III & IV Std. | III S.ஜெகன் மித்ரன் |
| 4 | Running Race | I S.சுதன் |
| | 75 Metres (Boys) | II P.ராகுல் கிஷோர் |
| | V & VI Std. | III R.சர்வேஷ் |
| 5 | Running Race | I B.பவித்ரன் |
| | 200 Metres (Boys) | II A.அனுரிதன் |
| | VII & VIII Std. | III V.K.தசின் |
| 6 | Running Race | I G.நித்தின் |
| | 400 Metres (Boys) | II சரவண சஞ்சய் |
| | IX & X Std. | III B.N.சஞ்ஜீவ் |
| 7 | Running Race | I N.அபிநேஷ் |
| | 200 Metres (Boys) | II தருண் விஷ்வரதன் |
| | 16 to 20 Years | III K.வேல்முருகன் |
| 8 | Running Race | I D.கவின் தங்கம் |
| | 200 Metres (Boys) | II R.ரகுசாந்த் |
| | 21 to 30 years | III M.பிரபு |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|---|
| 9 | Running Race | I | S.பாலாஜி |
| | 100 Metres (Men) | II | R.செல்வம் |
| | 31 to 40 years | III | M.செந்தில்குமார் |
| 10 | Running Race | I | P.தனசேகர் |
| | 100 Metres (Men) | II | J.G.அருண்ராஜா |
| | 41 to 50 years | III | G.மோகன்ராஜ் |
| 11 | Running Race | I | Dr.தமிழழகன் |
| | 100 Metres (Men) | II | M.ராமசாமி |
| | 51 to 60 years | III | K.சேகர் |
| 12 | Running Race | I | Dr.ராஜாமணி |
| | 100 Metres (Men) | II | எம்.எஸ்.சங்கமேஸ்வரன் |
| | 61 and above | III | P.அங்கண்ணன் |
| 13 | Ball Thourgh (Boys) | I | ராகுல் கிஷோர் |
| | I to V Std | II | S.சுதன் |
| | | III | சஞ்சிவ் ராஜ் |
| 14 | Ball Thourgh (Boys) | I | F.ராகுல் |
| | VI to VIII Std | II | S.விவேகன் |
| | | III | R.ஹரிருத் |
| 15 | Shotput (Boys) | I | G.நித்தின் |
| | IX to X Std | II | K.S.பிரவின்ராஜ் |
| | | III | R.ஹரிருத் |
| 16 | Shotput (Men) | I | A.M.மனோஜ் |
| | 21 to 30 Years | II | P.திருநாவுக்கரசு |
| | | III | R.ரகுசாந்த் |
| 17 | Shotput (Men) | I | R.கந்தகார்த்திக் |
| | 31 to 40 Years | II | K.S.ராம்மோகன் |
| | | III | S.பாலாஜி |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 18 | Shotput (Men) | I A.திருமூர்த்தி |
| | 41 to 50 Years | II G.சேகர் |
| | | III M.அமராபதி |
| 19 | Shotput (Men) | I K.C.பழனிச்சாமி |
| | 51 to 60 Years | II M.இராமசாமி |
| | | III நடராஜ் |
| 20 | Shotput (Men) | I P.மணி |
| | 61 and above | II S.R.சுப்பிரமணியன் |
| | | III எம்.எஸ்.சங்கமேஸ்வரன் |
| 21 | Ball Throw (Girls) | I P.மோனிகா |
| | III & IV Std. | II D.நிகாரிகா |
| 22 | Ball Throw (Girls) | I மிருதுவர்ஷினி |
| | V & VI Std. | II மிருதுளா |
| | | III நிரஞ்சனா |
| 23 | Ball Throw (Girls) | I M.உஷா நந்தினி |
| | VII & VIII Std. | II K.நிரஞ்சனாஸ்ரீ |
| | | III M.ஐஸ்வரிய ராணி |
| 24 | Ball Throw (Girls) | I B.ஹோவிதா |
| | IX & X Std. | II மோனிகா |
| | | III M.K.காவியா |
| 25 | Ball Throw (Girls) | I R.மஞ்சரி |
| | 16 to 20 years | II B.காவ்யா |
| | | III V.K.லாவண்யா |
| 26 | Ball Throw (Girls) | I S.பிரியங்கா |
| | 21 to 30 years | II சிவானந்தினி |
| | | III மேனகாகார்த்திகா |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 27 | Ball Throw (Women) | I லட்சுமி |
| | 31 to 40 years | II சத்யபிரியா |
| | | III கீதா செந்தில் |
| 28 | Ball Throw (Women) | I சரஸ்வதி |
| | 41 to 50 years | II பரமேஷ்வரி |
| | | III சிவகாமி |
| 29 | Ball Throw (Women) | I கே.ஜெயமணி |
| | 51 to 60 years | II கலைச்செல்வி |
| | | III சரோஜா |
| 30 | Ball Throw (Women) | I நீலா |
| | 61 and above | II பழனியம்மாள் |
| | | III பார்வதி |
| 31 | Running Race (Girls) | I B.ஷிவானி |
| | 50 Metres | II K.அனுப்பிரபா |
| | LKG & UKG | III G.ஸ்ருதி |
| 32 | Running Race (Girls) | I S.காவியா |
| | 50 Metres | II G.A.அக்ஷரா |
| | I & II Std | III L.ஜோஸ்கா |
| 33 | Running Race (Girls) | I D.நிகாரிகா |
| | 50 Metres | II P.மோனிகா |
| | III & IV Std | III M.தன்யா |
| 34 | Running Race (Girls) | I M.ஹர்ஷிகா |
| | 50 Metres | II G.S.பிரித்விதா |
| | V & VI Std | III B.S.மிருதுவர்ஷினி |
| 35 | Running Race (Girls) | I M.உஷா நந்தினி |
| | 50 Metres | II M.ஐஸ்வர்ய ராணி |
| | VII & VIII Std | III K.நிரஞ்சனாஸ்ரீ |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 36 | Running Race (Girls) | I R.மௌனிகா |
| | 100 Metres | II B.ஹோவிதா |
| | IX & X Std | III S.N.வேதிகா |
| 37 | Running Race (Girls) | I R.மஞ்சரி |
| | 100 Metres | II M.லத்திகா |
| | XI & XII Std | III B.காவியா |
| 38 | Running Race (Women) | I S.உமாமகேஷ்வரி |
| | 100 Metres | II M.N.மோனிஷா |
| | 21 & 30 years | III S.பிரியங்கா |
| 39 | Running Race (Women) | I M.கலைச்செல்வி |
| | 100 Metres | II D.வசந்தி |
| | 31 & 40 years | III கீதா செந்தில்குமார் |
| 40 | Running Race (Women) | I K.சரஸ்வதி |
| | 100 Metres | II தேவி சேகர் |
| | 41 to 50 years | III நவநீதம் தேவராஜ் |
| 41 | Running Race (Women) | I கே.ஜெயமணி |
| | 100 Metres | II P.தமிழ்ச்செல்வி |
| | 51 to 60 years | III சாந்தி விஸ்வநாதன் |
| 42 | Running Race (Women) | I புஷ்பவதி |
| | 100 Metres | II ருக்மணி |
| | 61 & Above | III பழனியம்மாள் |
| | | வீரம்மாள் (ஆறுதல் பரிசு) |
| 43 | Couples Ball Catching | I அருண்ராஜா – திலகா |
| | | I சுப்பிரமணி – நித்யா |
| | | II கிருஷ்ணசாமி – சரஸ்வதி |

# கயிறு இலுக்கும் போட்டி

| வ. எண். | முதல் பரிசு | இரண்டாம் பரிசு |
|---|---|---|
| 1 | ஸ்ரீரங்கராஜன் | R.சசிகாந்த் |
| 2 | G.சரவணன் | S.தினேஷ்ராஜ் |
| 3 | S.கைலாஷ் | S.சுதன்குமார் |
| 4 | தனசேகர் | பரமேஷ்வரன் |
| 5 | M.S.சங்கமேஸ்வரன் | அருணாச்சலம் |
| 6 | V.பரமேஷ் | லட்சுமணன் |
| 7 | J.G.அருண்ராஜா | சேகர் |
| 8 | S.சுரேஷ் | சத்தியராஜ் |
| 9 | K.ராஜா | சதீஷ் |



# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

03.07.2016 அன்று வெஸ்லி பள்ளி மைதானத்தில் நடந்த பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| **மாறுவேடப்போட்டி** | | |
| 1. | Pre KG | 1. K.M.ஜியா<br>2. G.அதிவிக் |
| 2. | LKG & UKG | 1. S.ஷரவந்த்<br>2. G.மகிழன் சின்னசாமி<br>3. V.ஷிவானி |
| 3. | I to V Std வரை | 1. K.B.கணேஷ்<br>2. S.ருதர்ஷ்<br>3. R.திஷா<br>4. R.கார்த்திகா (ஆறுதல் பரிசு) |
| **பாட்டுப்போட்டி** | | |
| 1. | LKG to UKG Std வரை | 1 B.ஷிவானி<br>2 G.மகிழன் சின்னசாமி |
| 2. | I to V Std வரை | 1 P.மோனிகா<br>2 அக்ஷரா<br>3 கணேஷ்<br>கார்த்திக் பாலாஜி (ஆறுதல் பரிசு)<br>ஜோசிகா (ஆறுதல் பரிசு) |
| 3. | VI to X Std வரை | 1 R.கார்த்திகா<br>2 நிரஞ்சனா ஸ்ரீ<br>3 G.A.நக்ஷசத்திரா<br>சங்கவிதா (ஆறுதல் பரிசு) |
| **பேச்சுப்போட்டி** | | |
| | | 1 G.A.நக்ஷசத்திரா<br>2 A.தன்வி<br>3 B.ஸ்ரீரஞ்சனி<br>காஜேஷ் (ஆறுதல் பரிசு) |

| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| | **கட்டுரைப்போட்டி** | |
| 1. | I to IX Std வரை | 1 G.A.நக்ஷ்த்திரா |
| | | 2 க.பா.கங்கேஷ் |
| | | 3 C.சம்யுக்தா |
| 2. | X to XII Std வரை | 1 க.நர்மதா ப்ரித்தம் |
| | | 2 த.நவீன் |
| | | 3 K.V.நவீன் |
| | | க.நதின் (ஆறுதல் பரிசு) |
| | **கவிதைப் போட்டி** | |
| | பள்ளி அளவிலான போட்டி | |
| 1. | I to IX Std வரை | 1 A.தன்வி |
| | | 2. க.பா.கங்கேஷ் |
| | | 3. சம்யுக்தா |
| 2. | I to IX Std வரை | 1 க.நர்மதா பிரித்தம் |
| | | 2. அபிதா செந்தில்குமார் |
| | | 3. க.நிதின் |
| | | S.சிவராகவ் (ஆறுதல் பரிசு) |
| | கல்லூரி அளவிலான போட்டி | 1 S.S.சிவரஞ்சனி |
| | **ஓவியப்போட்டி** | |
| 1. | LKG to UKG Std வரை | 1 G.மகிழன் சின்னசாமி |
| | | 2 S.ஷ்ரவந்தி |
| | | 3 S.ஷர்வேஷ்ரத்தன் |
| | | B.ஷிவானி (ஆறுதல் பரிசு) |
| 2. | I to V Std வரை | 1 S.நிக்கிதா |
| | | 2 S.ருத்ரக்ஸ் |
| | | 2 P.மோனிகா |
| | | 3 K.B.கங்கேஷ் |
| | ஆறுதல் பரிசு | D.ப்ரித்திகா லஷ்மி |
| | | S.சம்யுக்தா |
| | | G.A.அக்ஷத்ரா |
| 3. | VI to X Std வரை | 1 G.A.நக்ஷ்த்ரா |
| | | 2 S.N.வேதிகா |
| | | 2 R.கார்த்திகா |
| | | 3 D.ஶ்ரீரஞ்சனி |
| | ஆறுதல் பரிசு | D.லோகபிரியங்கா |
| | | S.சங்கவிகா |
| | | B.N.சஞ்ஜிவ் |

| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| | **ஓவியப்போட்டி** | |
| 4. | XI to XII Std வரை | 1 R.நிமிதா<br>2 M.லத்திகா |
| | **நடனப்போட்டி** | |
| 1. | LKG to UKG Std வரை | 1 G.மகிழன் சின்னசாமி<br>2 B.ஷிவானி<br>3 ஸ்ருதி |
| 2. | I to V Std வரை | 1 S.சம்யுக்தா |
| 3. | VI to XII Std வரை | 1 R.கார்த்திகா<br>2 சங்கவிதா<br>3 R.நிமிதா |
| | **கோலப்பட்டி** | |
| | | 1 K.பாரதி<br>2 G.சசிகலா<br>3 S.கீதாசெந்தில்குமார்<br>4 சித்ரா ரவிக்குமார்<br>5 சுமதி |

போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்ற அனைவருக்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. தத்தம் துறைகளில் திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்ளவும், வெற்றிகள் பல பெற்றிடவும், சாதனைகள் புரிந்திடவும் சங்கம் வாழ்த்துகிறது.

